பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 கார்த்திகை 30 சனிக்கிழமை 16.12.2023 கதிர் 400

# ஈழம் உருவாகுவதை தடுக்கும்படி கேட்டார்கள் மக்களின் கோரிக்கையை நிறைவேற்றினேன்

## பொது ஜன பெரமுனவின் பொதுக் கூட்டத்தில் அதன் புதிய தலைவரான மகிந்த எகத்தாளம்

நாடு பிளவுபடுவதை, ஈழம் உருவாகுவதைதடுங்கள்என்று மக்கள் என்னிடம் கேட்டார்கள் நான்அதனைநிறைவேற்றினேன் என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷதெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா பொது ஜன பெரமுனவின் இரண்டாவது பொதுக் கூட்டம் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச, பிரதமர் தினேஷ் குணவர்தன, தேசிய அமைப்பாளர் பஷில் ராஜபக்ச மற்றும் தம்மிக்க பெரேரா உட்பட பொது ஜன பெரமுனவின் ஏனைய தலைவர்களின் பங்கு பற்றுதலுடன் கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்றது. ☞2

## இது ரகசியம் அல்ல!

அடுத்த ஆண்டு தேர்தல் ஆண்டாக இருக்கக்கூடும்என்பதால்கொழும்பில் கூட்டணிகள் குறித்த பேச்சுக்கள் தீவிரமடைந்து வருகின்றன. ரணில், சஜித், அனுரகுமார என்று மூன்று தரப்பினர் இப்போது வரைக்கும் வேட்பாளர்களாகத் தயார் நிலையில் இருக்கிறார்கள். ஆனால், அது நிச்சயம் இல்லை.

ரணிலைஆதரிக்கஒருகூட்டணிக்கு முயற்சிக்கிறார்கள். அதுபோலவே சஜித்தை ஆதரிக்கவும் ஒரு கூட்டணிக்கு முயற்சிக்கிறார்கள். நிலமையைப்பொறுத்துபெரமுனவும் ஒருவேட்பாளரைக்களமிறக்கக்கூடும். அது பெரும்பாலும் தொழிலதிபர் தம்மிக்கப்பெரேராவாக இருப்பதற்கு வாய்ப்புக்கள் உண்டு. பெரமுனவின் நேற்றைய பொதுக் கூட்டத்தில் ☞2

## சதொசவில் 10 பொருள்களின் விலைகள் குறைப்பு

சதொச விற்பனை நிலையத்தினால் 10 அத்தியாவசிய உணவுபொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று வெள்ளிக்கிழமை முதல் டிசெம்பர் 31 ஆம் திகதி வரை விலை குறைப்பு நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. அதன்படி, பால் மா 10 ரூபாவாலும், இறக்குமதி செய்யப்பட்ட டின் மீன் (425 கிராம்) 55 ரூபாவாலும், 155கிராம்இறக்குமதிசெய்யப்பட்ட ☞2

## சுண்ணக்கல் அகழ்வினை எதிர்த்து பொன்னாவெளி மக்கள் போராட்டம்

### ஆய்வுக்கு சென்ற அதிகாரிகளை திருப்பி அனுப்பினர்



கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பொன்னாவெளிகிராமஅலுவலர் பிரிவில் சுண்ணக்கல் அகழ்வு பணிகளை முன்னெடுக்கும் வகையில் ஆய்வுகளை மேற்கொள்ள சென்ற கனியவள திணைக்கள அதிகாரிகள் உள்ளிட்ட அதிகாரிகளைஅவர்களது பணிகளைமேற்கொள்ள விடாது தடுத்த பிரதேச மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த ☞2

## முன்னணி எம்.பிக்கள் தடுத்து திருப்பி அனுப்பப்பட்டனர்

### மயிலத்தமடு சட்டவிரோதக் குடியேறிகள் கைவரிசை



மட்டக்களப்பு, மாதவனை மயிலத்தமடு மேய்ச்சல் தரை தொடர்பாக கால்நடை பண்ணையாளர்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகள் தொடர்பாக நேரில் பார்த்து ஆய்வு செய்யச் சென்ற தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கஜேந்திரகுமார்பொன்னம்பலம் மற்றும் செல்வராஜா கஜேந்திரன் ஆகியோரை அங்குள்ள சட்டவிரோத குடியேறிகள் தடுத்துத் திருப்பி அனுப்பினர்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் பயணம் செய்த வாகனம் மயிலத் தமடுவுக்குள் நுழைய விடாமல் வீதித் தடைகளை ஏற்படுத்தி எதிர்பபைத் தெரிவித்த அப்பிட்டியசுமணதேரர்தலைமையிலான சட்டவிரோதக் குடியேறிகள், நாடாளுமன்ற உறுப்பினர்களைத் திரும்பிச் செல்லுமாறு ☞8

## கைதுகள், காணி அபகரிப்புகள் இனவாத நோக்கி நடக்கின்றன

### அமெ. பிரதிநிதியிடம் சுமந்திரன் எம்.பி. எடுத்துரைப்பு

அண்மையில் இடம்பெற்ற பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழான கைதுகள்மற்றும்வட-கிழக்கில் தொடரும் காணி அபகரிப்புக்கள் என்பன இனவாதப்போக்கை அடிப்படையாகக் கொண்டிருப்பதாகவும், இவை இன ரீதியிலான பிரச்சினைகளுக்கு முக்கிய காரணமாக அமைந்திருப்பதாகவும் தெரிவித்தார் தமிழ் அரசுக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்.

இன ரீதியிலான சமத்துவம் மற்றும் நீதி தொடர்பான அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் விசேட பிரதிநிதி டிஸிரி எம் கொமியெர் ஸ்மித்தைச் சந்தித்துப் பேசிய போதே அவர் இதனைத் தெரிவித்தார். உத்தியோகபூர்வ பயணமாக ☞8

## ஹோட்டன் சமவெளி தேசிய பூங்காவை உயர் மட்டச் சுற்றுலாத் தலமாக்க ஆய்வு

ஹோட்டன்சமவெளி தேசிய பூங்கா உட்பட அதனை அண்மித்த பகுதிகளை உயர்மட்ட சுற்றுலா வலயமாக அபிவிருத்தி செய்ய வேண்டியதன் அவசியத்தைஜனாதிபதிரணில் விக்ரமசிங்க சுட்டிக் காட்டினார்.

ஜனாதிபதி நேற்று ஹோட்டன் சமவெளி தேசிய பூங்காவிற்குக் கண்காணிப்புப் பயணமாகச்சென்றிருந்தபோது இதனை வலியுறுத் தினார்.

ஹோட்டன்சமவெளி தேசிய பூங்காவின் பூங்காவிற்கு வருகைத்தந்த ஜனாதிபதி அங்குள்ள விருந்தினர் பதிவேட்டில் குறிப்பொன்றைப் பதிவிட்ட பின்னர் ஒஹிய வீதியினூடாகபூங்காவில் கண்காணிப்புப் பயணத்தை மேற் கொண்டார். ஹோட்டன் சமவெளி தேசிய பூங்காவை ☞8

## இலங்கைப் பல்கலைக்கழகங்களின் மானிடவியல்துறையிலும் விரைவில் சீர்திருத்தங்கள்

### கல்வி இராஜாங்க அமைச்சர் அறிவிப்பு

இலங்கைப் பல்கலைக்கழகங்களில்மானிடவியல்துறையில்விரைவில் பல்வேறு சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்குதிட்டமிட்டுள்ளதாக உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று செய்தியாளர்களிடம்அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

கல்வி மற்றும் உயர் கல்வித் துறைக்கு அதிகளவில் நிதி ஒதுக்கீடு செய்துள்ளதன் ஊடாக முதலீடு

## ஷானிக்கு பாதுகாப்பு தர நீதிமன்றம் உத்தரவு

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகரவுக்கு போதிய பாதுகாப்பை உறுதிப்படுத்த உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு இலங்கை பாதுகாப்பு அதிகாரிகளுக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அபேசேகரவினால் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனுவிற்கு பதிலளிக்கும் வகையில் மேற்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த மனு மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் நீதியரசர் நிஷங்க பந்துல கருணாரத்ன மற்றும் நீதியரசர் விக்கும் களுவாராய்ச்சி ஆகியோர் அடங்கிய அமர்வு ☞2

## முன்னாள் அமைச்சர் ரொஷான் பொது வேட்பாளராவதற்கு தயார்

### 2024 ஜனாதிபதித் தேர்தலில்

2024ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்கான பொதுவேட்பாளராகத் தன்னை முன்னிறுத்தினால் அதனை ஏற்றுக்கொள்வதற்கு முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க விருப்பம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில்அவர் மேலும்தெரிவித்ததாவது:

அரசியல் குழுக்கள் என்னை 2024 ஆண்டுக்கான ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளராக பெயரிடுவதற்கான முன்மொழிவை முன்வைத்தால், நான்அதைஉடனடியாக ஏற்றுக்கொள்வேன்.

என்னைப் பொறுத்தவரையில், ☞2

## மக்கள் மீது வரியை சுமத்துவதற்கு பதில் ராஜபக்சக்கள் திருடிய பணத்தை மீட்குக

### சந்திரிகா ஆளும் தரப்புக்கு வலியுறுத்து

நடுத்தர வர்க்கத்தினரிடமிருந்து வரி அதிகரிப்பைமேற்கொள்வதற்கு முன்னதாக, ராஜபக்ச குடும்பத்திடமிருந்து திருடப்பட்ட பணத்தை மீட்பதற்கு முன்னுரிமை அளிக்குமாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஆளும் தரப்பிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இவ்விடயம் சம்பந்தமாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பொருளாதாரநெருக்கடியில் உள்ள அரசுக்கு வருவாய் அவசியமாகின்றது. அதற்காக நடுத்தர வர்க்கத்திற்கு கூடுதல் வரிகளைசுமத்துவதற்கு பதிலாக மாற்று நடவடிக்கைகளைமுன்னெடுக்க வேண்டியது அவசியம்.

ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கை குறைந்த வரி வீதத்தையே கொண்டிருக்கின்றது, எனினும் தற்போதைய பொருளாதார ☞2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

தம்மிக்கவுக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டிருக்கின்றது. ஆனால் அதுகூட நிச்சயமில்லை. தேர்தல் அண்மிக்கும்போது களநிலைமைகள் ஒத்துழைத்தால் ராஜபக்சக்களேகூடக் களமிறங்கக்கூடும்.

மற்றொரு பக்கத்தில் பொது ஜன பெரமுனவில் இருந்து பிரிந்து சுயாதீனமாகச் செயற்படும் சுதந்திர முன்னணியினர் ஒரு பொது வேட்பாளரை நிறுத்துவதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். ஆனால் அந்த முயற்சியும் இன்னும் பெரிதாக வளரவில்லை. அதேநேரம் சுதந்திர முன்னணியினர் சஜித் தரப்போடும் பேசி வருகின்றார்கள். சஜித்தை தவிர்த்துவிட்டு பொது வேட்பாளர் ஒருவரைப் போடுவது அவர்களின் திட்டங்களில் ஒன்று. பெரமுனைவை எதிர்கொள்ளக்கூடிய பொது வேட்பாளராக அவர் இருக்கவேண்டும் என்கிற எதிர்பார்ப்பும் உண்டு. ஆனால் சஜித் அதற்கு உடன்பாடில்லை. தான் போட்டியிட்டே ஆகவேண்டும் என்பதில் பிடிவாதமாக இருக்கிறார்.

அப்படிப்பட்ட நிலையில் சஜித்தை ஜனாதிபதி வேட்பாளராக்கினால் அந்தக் கூட்டணியின் பிரதித் தலைவர் பதவி தமக்குத் தரப்படவேண்டும் என்று சுதந்திர முன்னணியின் சார்பில் கேட்கப்படுகின்றது. பிரச்சினை என்னவென்றால் சஜித் அதற்கும் தலையாட்டத் தயாராக இல்லை. சுதந்திர முன்னணிக்கு கூட்டணியின் பிரதித் தலைவர் பதவியைக் கொடுத்துவிட்டால், அவரே அடுத்த பிரதமராகவும் வருவார் என்று கருதப்படும் என்பதால், சஜித்துடன் இருப்பவர்களில் அந்தப் பதவி மீது கண் வைத்திருக்கும் ஹர்ஷ டி சில்வா, சரத் பொன்சேகா, ரஞ்சித் மத்தும பண்டார ஆகியோரின் அதிருப்தியைத் தேடிக்கொள்ள வேண்டியிருக்கும் என்பது சஜித்தின் அச்சம்.

சுதந்திர முன்னணியோ சஜித்தை ஆதரிப்பதானால் தமது தரப்பில் டலஸ் அழகப்பெரும அல்ல ஜி.எல்.பீரிஸ்க்கு பிரதமர் பதவி வழங்கப்படவேண்டும் என்று விரும்புகின்றது. எந்தப் பிரதிபலனும் இல்லாமல் சஜித்தை ஆதரிக்க சுததந்திர முன்னணியி தயாராக இல்லை. அப்படி சஜித் ஒத்துவரவில்லை என்றால் பொது வேட்பாளரை நிறுத்தி புதிய கூட்டணியைத் தயார்ப்படுத்திவிட வேண்டியதுதான் என்பது அவர்களின் நிலைப்பாடு.

மற்றொரு பக்கத்தில் பெரமுனவில் இருந்து கொஞ்சம் எம்பிக்களையும் ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து கொஞ்சம் எம்பிக்களையும் இழுத்து ரணிலுக்கு ஆதரவான கூட்டணி ஒன்றை அமைப்பதில் நிமல் லன்ஸா போன்றவர்கள் தீவிர முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

எல்லோருடைய முயற்சிகளும் இதுவரையில் உருப்படியான பயனைத் தந்ததாக இல்லை. இப்போதைக்கு எல்லோரும் அவரவர் நலன்களை முதன்மைப்படுத்தி மட்டுமே காய்களை நகர்த்த முயற்சிக்கிறார்கள். தேர்தல் காய்ச்சல் ஏற ஏறத்தான், தங்கள் தங்கள் வெற்றி வாய்ப்புக்களின் போதாமைகள் உறைக்கும்போதுதான் சமரசங்களுக்கான வாய்ப்புக்கள் அதிகரிக்கும். அப்போது புதிய கூட்டணிகளும் புதிய இணக்கப்பாடுகளும் ஏற்பாடும். பொறுத்திருப்போம்....!

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## ஈழம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் புதிய தலைவராக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச இந்தக் கூட்டத்தில் அறிவிக்கப்பட்டார். முன்னாள் அமைச்சர் காமினி லொகுகே, மஹிந்த ராஜபக்சவின் பெயரை முன்மொழிந்தார். அந்த யோசனையை முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ உறுதிப்படுத்தினார்.

அதன் பிறகு, பேரவையில் இருந்த கட்சி உறுப்பினர்களின் ஒருமித்த கருத்தின் அடிப்படையில் இந்த முன்மொழிவு பொதுக் கூட்டத்தில் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டது.

கூட்டத்தில் உரையாற்றிய மகிந்த ராஜபக்ச மேலும் தெரிவித்ததாவது:

எமது சம்மேளனக் கூட்டம் நடைபெறும் என்று கூறியவுடன் சமூக ஊடகங்களைப் பயன்படுத்தி இயலுமான அளவில் சேறு பூசும் செயற்பாடுகளைப் பலர் முன்னெடுத்தனர். அவ்வாறு நடவடிக்கைகளை முன்னெடுத்தவர்களுக்கு இந்தச் சம்மேளனக் கூட்டத்திற்கு வருகை தந்து பொதுமக்களாகிய நீங்கள் முக்கியமான பதிலை வழங்கியுள்ளீர்கள்.

2005ஆம் ஆண்டு நாம் தேர்தலில் போட்டியிட்டபோது எமக்கு எதிராக இதேபோன்றுதான் பல்வேறு வழிகளில் சேறு பூசினார்கள். அன்றும் மக்கள் என்னிடத்தில் ஒரேயொரு கோரிக்கையை முன்வைத்தனர். நாடு இரண்டாக பிளவுபடுவதை தவிருங்கள். அதேபோல ஈழம் உருவாகுவதைத் தடுத்து நிறுத்துங்கள் என்று கோரினார்கள்.

அதனை நான் முழுமையாக ஏற்றுக்கொண்டு செயற்பாடுகளை முன்னெடுத்தேன் 30 வருட காலத்தில் எந்த ஒரு தலைமையாலும் பிரபாகரனுடன் நேருக்கு நேராக போரில் ஈடுபட முடியாத இயலாமை காணப்பட்டது.

சில தலைவர்கள் போரை நிறைவு செய்வதாக கூறி பிரபாகரனுக்கு ஆயுதங்களை அனுப்பி வைத்திருக்கிறார்கள். அந்தத் தலைவர்கள் யார் என்பது உங்களுக்கு நினைவிருக்கும் என்று நான் கருதுகிறேன். அவ்வாறு தலைவர்கள் அனுப்பி வைத்த ஆயுதங்கள் மூலமாகத்தான் பிரபாகரன் எமது தரப்பினர் மீது தாக்குதல்களை நடத்தினார். அதுமட்டுமன்றி நாட்டின் முக்கியமான தலைவர்களையும் கொலை செய்தனர்.

தற்போது பொருளாதார நெருக்கடிகள் தொடர்பில் மாத்திரமே கலந்துரையாடுகின்றனர். எம்மை மக்கள் மத்தியில் குரலற்றவர்களாக மாற்றுவதற்கு நடவடிக்கைகளை முன்னெத்து வருகின்றனர்,

எம் மீது குற்றம் சுமத்தி எம்மைக் குற்றவாளிகளாக மாற்றிவிடும் போக்கு காணப்படுகிறது. வரலாற்றைத் தெரியாதவர்கள்தான் உண்மைக்குப் புறம்பான கதைகளைக் காவித் திரிகிறார்கள். எம்மை அவதூறு செய்து திரிகிறார்கள்.

அதைப் பயன்படுத்திச் சிலர் தற்போது அதிகாரத்தைப் பிடிப்பதற்கு முயற்சிக்கின்றர்கள். அவர்கள் தோற்கடிக்கப்படவேண்டும். நாம் மக்களைக் கைவிட மாட்டோம் - என்றார்.

## சதொசவில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டின்மீன் 10 ரூபாவினாலும், 425 கிராம் உள்நாட்டு டின் மீன் 20 ரூபாவினாலும், உள் ளூர் உருளைக்கிழங்கு 15 ரூபாவினாலும், கொண்டைக் கடலை 5 ரூபாவினாலும் ஒரு கிலோ சிவப்பு அரிசி 8 ரூபாவினாலும், வெள்ளை நாடு (உள்ளூர்) 7 ரூபாவினாலும் விலை குறைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, முட்டை 35 ரூபாவிற்கும், ஒரு கிலோ சீனி 275 ரூபாவிற்கும், ஒரு கிலோ வெங்காயம் 400 ரூபாவிற்கும் விற்பனைசெய்யப்படும் என்றுள்ளது.

## சுண்ணக்கல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதேசத்தில் மேற்கொள்ளவுள்ள சுண்ணக்கல் அகழ்வு பணிகள் காரணமாக தங்களது கிராமங்களே இல்லாது போய்விடும் எனத் தெரிவித்து பிரதேச பொது மக்கள் தொடர்ச்சியாகப் போராடி வருகின்றார்கள்.

இந்தநிலையில் இன்றையதினம் சுண்ணக்கல் அகழ்வுப் பணிகளை மேற்கொள்ளும் வகையில் அதற்கான அனுமதியினை வழங்கும் பொருட்டு கனிய வளத் திணைக்கள அதிகாரிகள், பிரதேச சபையின் செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகள் அங்கு சென்றிருந்தனர். அவர்களை தடுத்து நிறுத்திய பொது மக்கள் அவர்களை ஆய்வுசெய்யவிடாது திருப்பி அனுப்பினர்.

# மஹபொல ஊடாக கல்வியில் புரட்சிகர மாற்றத்தை தரமுடியும்

### ஜனாதிபதி தெரிவிப்பு



மஹபொல ஊடாக கல்வித்துறையில் புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்த முடியும் எனவும் திறந்த பொருளாதாரத்தின் நன்மைகளை கிராமத்திற்கு எடுத்துச் செல்ல முடியும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

பத்து வருடங்களின் பின்னர் மஹபொல கல்வி மற்றும் வர்த்தகக் கண்காட்சியை மீள ஆரம்பிப்பதன் மூலம் அதிகமானவர்களுக்கு உயர் கல்விக்கான கதவுகள் திறக்கப்படும் எனத் தெரிவித்த ஜனாதிபதி, மறைந்த அமைச்சர் லலித் அத்துலத்முதலி மஹபொல புலமைப்பரிசில் நிதியத்தை ஆரம்பித்து வைத்து இலங்கையின் கல்விக்கு ஆற்றிய சேவைக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் சீதாவக பல்கலைக்கழகத்தின் பட்டப்பின்படிப்பு ஆராய்ச்சி மையமான பட்டப் பின் ஆய்வுகள் (Post Graduate for Research) நிறுவனத்திற்கு அவரது பெயரிடப்படும் என்றும் குறிப்பிட்டார்.

மஹபொல 2023 கண்காட்சியின் இரண்டாம் நாளான நேற்று பிரதம அதிதியாகக் கலந்து கொண்டபோதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சினால் ஏற்பாடுசெய்யப்பட்ட இந்த ஆண்டின் மிகப்பெரிய கல்வி மற்றும் வர்த்தகக் கண்காட்சியான 'மஹபொல 2023' கண்காட்சி கடந்த 13 ஆம் திகதி ஜா-எல நகர சபை மைதானத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

இந்நாட்டின் வறிய பெற்றோரின் பிள்ளைகளை கல்வியில் முன்னேற்றும் நோக்கில் மறைந்த முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத்முதலியினால் ஆரம்பிக்கப்பட்ட மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நிதிக்கு ஆதரவாக மஹபொல வர்த்தகக் கண்காட்சி ஆரம்பிக்கப்பட்டது.

10 வருடங்களின் பின்னர் இந்த வருடம் 226 ஆவது மஹபொல கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன் இக்கண்காட்சி டிசெம்பர் 17வரை நடைபெறவுள்ளமை விசேட அம்சமாகும்.

இக்கண்காட்சியானது 350 இற்கும் மேற்பட்ட பல்துறைசார் கண்காட்சிக் கூடங்களைக் கொண்டுள்ளது. இது புத்தாக்க மற்றும் தொழில்முனைவோர் தங்கள் தயாரிப்புகளுக்கான சந்தையைப் பெறுவதற்கான வாய்ப்பை வழங்குகிறது.

இரண்டாவது நாளான நேற்று, கல்விக்காக ஒதுக்கப்பட்டதுடன், கண்காட்சிக் கூடங்களையும் ஜனாதிபதி பார்வையிட்டார். கண்காட்சியைப் பார்வையிட வந்த பாடசாலை மாணவர்களுடன் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சிநேகபூர்வமாகக் கலந்துரையாடினார்.

லலித் அத்துலமுதலி மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நிதியத்திற்கான ஒன்லைன் நன்கொடை வசதிக்காக www.eservices.mahapola.lk என்ற இணையத்தளத்தையும் ஜனாதிபதி அங்குரார்ப்பணம் செய்துவைத்தார்

அந்த நிதிக்கான முதல் நன்கொடையை பராக்கிரம பண்டார வழங்கினார். மஹபொல 2023 உடன் இணைந்து நடத்தப்பட்ட கலை, கட்டுரை, குறும்படம் மற்றும் வீதி நாடகப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களை வழங்குவதற்கும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இணைந்துகொண்டார்.

மகா சங்கத்தினர் உட்பட ஏனைய மதத்தலைவர்கள், வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ, சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர, நாடாளுமன்ற உறுப்பினர் சஹன் பிரதீப், மேல் மாகாண ஆளுநரும் விமானப் படைத்தளபதியுமான எயார் மார்ஷல் ரொஷான் குணதிலக, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க உட்பட பல அதிதிகள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## முன்னாள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை நாட்டின் வளமான இயற்கை வளங்கள், திறமையான பணியாளர்கள் மற்றும் மூலோபாய இருப்பிடம் ஆகியன முக்கியமானவையாக இருக்கின்றன. நாடு என்ற வகையில் அனைத்தையும் இலங்கை கொண்டுள்ளது முறையான முகாமைத்துவம் மற்றும் திறமையான அணுகுமுறை ஊடாக இந்த வளங்களைச் சமமாக பகிரமுடியும். ஆனால் நாட்டில் சமத்துவமான அபிவிருத்தியை உறுதிப்படுத்துவதற்கு வலுவான ஊழல் எதிர்ப்பு நடவடிக்கைகளின் முக்கியமான தேவையாக உள்ளது.

பல ஆண்டுகளாக நாட்டைப் பீடித்துள்ள மோசடி மற்றும் ஊழலைத் திறம்பட எதிர்த்துப் போராடுவதற்கு தற்போதைய கணக்காய்வு செயல்முறையைக் கணிசமாக வலுப்படுத்தவேண்டும். அவ்வாறு வலுப்படுத்துவதை இலக்காகக் கொண்ட அரசியல் தலைமையொன்று நாட்டுக்கு அவசியமாகின்றது என்றார்.

## மக்கள் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீட்சியை மையப்படுத்தி வரிகளை அதிகரிப்பதற்கு பதிலாக ஊழல், மோசடிகள் மூலமாக இழந்த நிதியை மீளப் பெறுவதில் கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும்.

பணம் சம்பாதிப்பவர்கள் வரிகளைச் செலுத்துவதற்கு விரும்புவதில்லை. அதேபோன்று அவர்களிடத்தில் வரிகள் அறவிடப்படுவதுமில்லை. வரிகள் நடுத்தர வர்க்கத்தினரிடம் வசூலிக்கப்படுகின்றது. அதனை நான் எதிர்க்கின்றேன்.

அதுமட்டுமன்றி ராஜபக்ச குடும்பத்தினரால் திருடப்பட்ட மற்றும் மோசடி செய்யப்பட்டு வெளிநாடுகளில் பதுக்கி வைக்கப்பட்டதாகக் கூறப்படும் பணத்தை விசாரித்து மீட்பது பொருத்தமான நடவடிக்கையாக அமையும்.

உலகவங்கி அவற்றைப் பெறுவதற்கான வழிகளைக் கொண்டுள்ளது. அதனை முறையாக அணுகி பணத்தை மீட்க வேண்டும்;. கொள்ளையடிக்கப்பட்ட பணத்தை அவ்வாறு மீட்கும் பட்சத்தில் சதாரண பொது மக்கள் அதியுச்சமான வரிகளைச் செலுத்த வேண்டியதில்லை என்றார்.

## ஷானிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.




# 3 ஆயிரத்து 520 மில்லியன் டொலர் கடனுதவியை எதிர்பார்க்கின்றோம்

## நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் கருத்து



சர்வதேச நாணய நிதியம் இரண்டாம் கட்ட கடன் தொகையை வழுங்க இணக்கம் தெரிவித்துள்ளமையால், சர்வதேச நிதி நிறுவனங்களிடமிருந்து 3520 மில்லியன் டொலர் கடனுதவிகளை எதிர்பார்க்கின்றோம். எனவே இடைநிறுத்தப்பட்டுள்ள சுமார் 200 அபிவிருத்திவேலைத்திட்டங்களைவிரைவில் மீள ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் -

வரவு - செலவு திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளமை கடன் மறுசீரமைப்பு மற்றும் சர்வதேச நாணய நிதியத்துடன் எட்டப்பட்டுள்ள இணக்கப்பாடுகளை செயற்படுத்தல் என்பவற்றில் மிக முக்கியத்துவமுடையதாக அமைந்துள்ளது. இரண்டாம் கட்ட இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளதன் ஊடாக 334 மில்லியன் டொலர் விரைவில் கிடைக்கவுள்ளது. இதன் மூலம் உலகவங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி என்பவை இணங்கிய கடன் தொகையை விடுவிப்பதாக அறிவித்துள்ளன.

மக்கள் எதிர்கொள்ளும் சிரமங்களை உதாசீனப்படுத்தி செயற்படுவதற்கு நாம் தயாராக இல்லை. ஆனால் இவ்வாறான தீர்மானங்களை எடுத்திருக்காவிட்டால், 2022ஐ விட மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ள நேரிட்டிருக்கும். வரவு - செலவு திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக அரச வருமானத்தை எவ்வாறு அதிகரிப்பது என்பதே எமது இலக்காகும். எனவே அரசியல் கொள்கைகளின் ஊடாகப்; பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண முடியாது.

வற் வரி விலக்களிக்கப்பட்டுள்ள பொருள்களின் வகைகள் ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ளன. எதிர்வரும் இரு வாரங்களுக்குள் தனித்தனியாக எந்தெந்தப் பொருள்கள் அந்த வகைகளில் உள்ளடங்கும் என்பது நிதி அமைச்சால் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும். வரிகொள்கையில் மாற்றத்தை ஏற்படுத்தாவிட்டால் நாம் எதிர்பார்க்கும் இலக்கை எம்மால் அடைய முடியாது.

கடன்மறுசீரமைப்புக்கானஒப்பந்தங்களில் கையெழுத்திட்டதன்பின்னர்,கடந்தகாலங்களில் ஆரம்பிக்கப்பட்டு பின்னர் பொருளாதார நெருக்கடிகளால் இடைநிறுத்தப்பட்டுள்ள 200 அபிவிருத்தி வேலைத்திட்டங்களை மீள ஆரம்பிக்க எதிர்பார்த்துள்ளோம். 2021 இறுதியில் நேர் பெறுமானத்தில் காணப்பட்ட பொருளாதார வளர்ச்சி வீதம், அதன் பின்னரான 6 காலாண்டுகளில் மறை பெறுமானத்திலேலேயே காணப்பட்டது. எனினும் 2023 மூன்றாம் காலாண்டின் பின்னர்மீண்டும்பொருளாதாரவளர்ச்சிவேகம் நேர்பெறுமானத்தில் செல்ல ஆரம்பித்துள்ளது. இதனைத் தொடர்ந்தும் பேணுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

இலங்கையிலுள்ள கண்காணிப்பு அமைப்புக்கள் நாட்டின் பொருளாதார நிலைமை தொடர்பில் பொறுப்புடன் கணிப்புக்களை மேற்கொண்டு தரவுகளை வெளியிட வேண்டும். கடந்த காலங்களில் சில நிறுவனங்களால் நாணய நிதியம் தொடர்பில்வெளியிடப்பட்ட கணிப்புக்கள் தவறானவையாகும். நாணய நிதியத்திடமிருந்து இரண்டாம் கட்ட கடன் தொகைக்கான இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளமை இதற்கு சிறந்த உதாரணமாகும். இப்போதிலிருந்தே நாணய நிதியத்தின் அடுத்த மீளாய்வுக்கும் தயாராகின்றோம்.

வரி அதிகரிப்பானது 2 சதவீதம் பணவீக்கத்தில் தாக்கம் செலுத்தும். எம்மால் மேற்கொள்ளப்பட்டுள்ள மறுசீரமைப்புக்களால் மக்களுக்கு பாதிப்பு ஏற்படவில்லை என்று நாம் கூறவில்லை. அதற்காக மக்களுக்கு சாதகமான தீர்மானங்களை எடுத்திருந்தால், 2022ஐ விட மோசமான நிலைமைக்கு சென்றிருப்போம். எவ்வாறிருப்பினும் எம்மால் எடுக்கப்பட்ட அவ்வாறான தீர்மானங்களின் பிரதிபலனாகவே நாணய நிதியத்திடமிருந்து இரண்டாம் கட்ட கடன் தொகையைப் பெற்றுக் கொள்ள முடிந்தது.

அதனை அடிப்படையாகக் கொண்டு 2023 மற்றும் 2024ஆம் ஆண்டுகளில் சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து 667 மில்லியன் டொலரும், உலக வங்கியிடமிருந்து 1300 மில்லியன் டொலரும், ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து 1553 மில்லியன் டொலரும் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. - என்றார். (05)

# அதிகாரிகளை கண்காணிக்க ஜனவரி முதல் நடவடிக்கை

## ஆஷு மாரசிங்க கூறுகிறார்



அதிகரிக்கப்பட்டிருக்கும் வரி வருமானங்களை முறையாக சேர்க்கும் பொறுப்பு அரச அதிகாரிகளுக்கே இருக்கிறது. அதனைச்செய்யத் தவறும் அதிகாரிகளுக்கு எதிராக வழக்குத் தொடுக்க நாங்கள் நடவடிக்கை எடுப்போம்.

அத்துடன் நாட்டின் மொத்தவருமானம்சர்வதேச நாணயநிதியத்தின்இலக்கை எட்டக்கூடியதாக இருக்கிறது எனஐக்கியதேசியகட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்ஆஷு மாரசிங்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான சிறிகொத்தவில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் -

நாட்டைக்கட்டியெழுப்பப்பயணிக்க வேண்டிய வழியை ஜனாதிபதி தெரிவித்திருக்கிறார். அதன் பிரகாரம் செயற்பட்டுவருவதாலேயேதற்போது சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் கட்ட கடன் உதவியும் எமக்குக் கிடைக்க இருக்கிறது.

எதிர்வரும் ஜனவரியில் அந்த உதவி கிடைக்கும் என ஜனாதிபதி நம்பிக்கைவெளியிட்டிருந்தார். அதன் பிரகாரம் எமக்கு மொத்தமாக 670 அமெரிக்க டொலர்கள் கிடைக்கின்றன.

நாணய நிதியத்தின் இந்தக் கடன் உதவி கிடைப்பதன் மூலம் சர்வதேசத்துக்கு இலங்கைதொடர்பில் நம்பிக்கை ஏற்படுகிறது.

இதன் காரணமாக உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் சர்வதேச நிதி நிறுவனங்களின் உதவிகளையும் எமக்குப் பெற்றுக் கொள்ள முடியுமாகிறது.

அதேநேரம் ஜனாதிபதியின் நிதிக்கொள்கை மற்றும் வெளிநாட்டுக் கொள்கையை சர்வதேசம் ஏற்றுக்கொண்டுள்ளது. நாடு என்ற வகையில் இது எமக்குக் கிடைத்த பாரிய வெற்றியாகும்.

அத்துடன் வங்குரோத்து அடைந்திருக்கும் நாட்டை மீளக் கட்டியெழுப்ப அரச வருமானம் அதிகரிக்கப்படவேண்டும். அதனாலேயே தற்போது வரி அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

அதனால்அரசவருமானங்களைச் சேகரிக்கும் அதிகாரிகள் அதனை முறையாகச் செய்ய வேண்டும். கடந்த காலங்களில் இந்த அதிகாரிகள் தங்களின் பொறுப்பை முறையாகச் செய்யத்தவறியதாலேஅரசவருமானம் குறைவடைந்திருந்தது.

அதனால் இந்த அதிகாரிகளின் மோசடிகளை நிறுத்த இவர்களின் செயற்பாடுகளைக் கண்காணிக்கவும் முறையாகசெயற்படாதஅதிகாரிகளுக்கு எதிராகவழக்குத்தொடுக்கவும்தற்போது சட்டம் அமைக்கப்பட்டிருக்கிறது.

மேலும் நாட்டில் இந்த வருடத்தின் புதன்கிழமை வரை வரி வருமானமாக 2540 பில்லியன் ரூபா கிடைக்கப்பெற்றுள்ளது.

வரி அல்லாத வருமானமாக 254 பில்லியன் ரூபா கிடைக்கப்பெற்றிருக்கிறது. அதன் பிரகாரம் நாட்டின் மொத்த வருமானமாக 2794 பில்லியன் கிடைக்கப்பெற்றிருக்கிறது.

எமக்கு சர்வதேச நாணய நிதியம் வழங்கி இருக்கும் இலக்கு 2850 பில்லியனாகும். அதனால் நாணய நிதியத்தின் இலக்கை அடைவதற்கு முடியும் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கிறது.

அதனை செய்வதற்கு அரச வருமானம் சேகரிக்கும் அதிகாரிகளில் இருக்கும் ஊழல் மோசடிமிக்க அதிகாரிகளைக் கண்டு பிடிக்க வேண்டும். எதிர்வரும் ஜனவரி முதல் அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். - என்றார்.(05)

# தனவந்தர்களை மேலும் செல்வந்தவர்களாக்கும் வரவு – செலவு திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது

## எதிர்க்கட்சி தலைவர் சஜித் கவலை



நாடாளுமன்றத்தில்நிறைவேற்றப்பட்டுள்ள 2024ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்டம் தனவந்தர்களை மேலும் செல்வந்தவர்களாக்குவதாகவும், சாதாரண மக்களை உதாசீனப்படுத்தும் வகையிலுமே காணப்படுகிறது.

இதனால் சாதாரண மக்கள் எதிர்கொள்ளப்போகும்நெருக்கடிகள் கவலைக்குரியவையாகும் என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

வரவு - செலவு திட்டம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் ஊடகங்களுக்குகருத்துவெளியிடும் போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் -

நாட்டிலுள்ள 220 இலட்சம் மக்கள் எதிர்நோக்கியுள்ள துயரத்தை எண்ணி கவலையடைகின்றோம். சாதாரண மக்களை மறந்து தனவந்தர்களை மேலும்செல்வந்தவர்களாக்கும் வரவு - செலவு திட்டம்நிறைவேற்றப்பட்டுள்ளமை மிகவும் கவலைக்குரியது. இந்த வரவு - செலவுதிட்டத்தின்மூலம்சாதாரண மக்களுக்கு எவ்வித நன்மையும் கிடைக்கப் போவதில்லை.

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து இரண்டாம் கட்ட கடன் தொகை மாத்திரம் கிடைத்தால் போதாது. இனிவரும் காலங்களில் எஞ்சிய கடன் தொகைகளையும் பெற்றுக்கொள்ளவேண்டியுள்ளது. மக்கள் எதிர்கொள்ள நேரிடவுள்ள துயரத்தை எண்ணிக் கவலையடைகின்றோம்.

ஊழலுக்கு எதிராக, ஊழலை ஒழிப்பதற்காக முன்னிற்கின்ற எவருக்கும்ஐக்கியமக்கள்சக்தியின் கதவுகள் திறந்தே இருக்கும்.

முன்னாள் அமைச்சர் ரொஷான் ரணசிங்க சகல சலுகைகளையும்உதாசீனப்படுத்தி, கொள்கை ரீதியாக தீர்மானத்தை எடுத்துள்ளமைவரவேற்கத்தக்கது. - என்றார். (05)

# மக்களுக்கு ஏற்படப்போகும் தலைவிதியை நினைத்து கவலையடைகின்றாராம் சஜித்

வரவு செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டதன் மூலம் மக்களுக்கு ஏற்படப்போகும் தலைவிதியை நினைத்து கவலையடைகிறேன் செல்வந்தர்களை மாத்திரம் போஷிக்கும் வரவுசெலவுதிட்டமாகவேகாணுகிறோம்எனஎதிர்க்கட்சித்தலைரவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

வரவு செலவு திட்டத்தின் மூன்றாவது வாசிப்பின் இறுதி வாக்கெடுப்புக்கு பின்னர் நாடாளுமன்றவளாகத்தில்ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் -

அரசாங்கம் அடுத்த வருடத்துக்காக நிறைவேற்றிக் கொண்டுள்ள வரவு செலவு திட்டத்தில் சாதாரண மக்களுக்கு எந்த நன்மையும் இல்லை.

இதனால் எதிர்வரும் காலங்களில் மக்களுக்கு ஏற்படப்போகும் தலைவிதியைநினைத்து கவலையடைகிறேன். வரவு - செலவுதிட்டத்தில்சமூகத்தில்எந்தத் தரப்புக்கும் எந்த நன்மையும் கிட்டாதநிலையில்செல்வந்தர்களை மாத்திரம் மேலும் போஷிக்கும் வகையிலேயே அமைந்துள்ளது.

சாதாரண மக்களைப் புறக்கணித்து பெரும் செல்வந்தர்களை போஷிக்கும் வரவு - செலவுத் திட்டம் மூலம் சமூகத்தில் எந்தத் தரப்புக்கும் எந்த நன்மையும் கிட்டவில்லை. இதனை மிகவும் கீழ்தரமான வரவு -செலவு திட்டம் எனத் தெரிவிக்கலாம்.

சர்வதேச நாணய நிதியத்தின் மூலம் இன்னும் 8 தவணைகளைப் பெறவேண்டும். தற்போது இரண்டாவது தவணை கிடைக்க இருப்பதாக ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

நாணய நிதியத்தின் இரண்டாம் கட்ட உதவியை பெற்றுக் கொள்ளவே மக்களின் மது பாரிய வரிசுமையை ஏற்படுத்தி இருக்கிறது. எனவே, இரண்டாம் தவணை கிடைத்தமைக்காக ஆரவாரப்பட்டு கொண்டாடக் கூடாது.

அத்துடன் ஊழலை எதிர்க்கும், ஊழலை இல்லாதொழிக்க முன் நிற்கும் நல்லாட்சிக்காகத் தயாராகும் எந்தவொரு நபருக்கும் ஐக்கிய மக்கள் சக்தியின் கதவுகள் திறந்தே இருக்கும்.

ரொஷான் ரணசிங்கவுக்கு இருந்த அனைத்து அமைச்சுப் பதவிகளையும்சலுகைகளையும், வரப்பிரசாதங்களையும் மறந்து ஒரு கொள்கை ரீதியான முடிவை அணுகியே வரவு - செலவுத் திட்டத்துக்கு எதிராக வாக்களித்திருந்தார் என்றே நினைக்கிறேன்.

அவரின் இந்த நடவடிக்கை சீரழிந்து வரும் அரசியல் கலாசாரத்திற்கு முற்றுப்புள்ளி வைத்து,புதிய பிரவேசத்தின் தொடக்கமாக இருக்கலாம். - என்றார்.

(05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## பொறுப்புக்கூறல் வெறும் கானல் நீர்

**இலங்கை இன்று எதிர்கொண்டுள்ள பொ–ருளாதார நெருக்கடிக்குக் காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று இலங்கை மக்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். மாற்றுக்கொள்கைகள் நிலையம் நடத்திய கருத்துக் கணிப்பு ஒன்றில் மக்கள் இவ்வாறு தமது கருத்தை வெளிப்படுத்தியுள்ளனனர். மக்களாட்சி (ஜனநாயகம்) தொடர்பான நம்பிக்கைச்சுட்டிக்கான ஆய்வின்போதே அவர்கள் இதனைத் தெரிவித்துள்ளனர்.**

**பொது ஜன பெரமுன கட்சியின் தேசிய மாநாடு (பொதுக் கூட்டம்) சுகததாச உள்ளரங்கத்தில் நேற்று நடைபெற்ற நிலையில் இந்தக் கருத்துக் கணிப்பும் வெளியாகி இருக்கின்றமை, தற்செயலானவை அல்ல என்றே கொள்ளவேண்டும்.**

**"ஜனாதிபதிரணில்விக்ரமசிங்கவின்ஆட்சியானதுபொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்குப் பங்களிப்புச்செய்யும் எனக் கூறக்கூடியபொருளாதாரமற்றும்கொள்கைமறுசீரமைப்புக்களைத் தொடர்ச்சியாக முன்னெடுத்துவருகின்றது. தற்போதைய பொருளாதாரநெருக்கடிக்குபொதுமக்கள்பொறுப்புக்கூறவேண்டிய அவசியமில்லை என்றாலும், இந்நெருக்கடியிலிருந்து மீள்வதற்காக அரசு முன்னெடுத்திருக்கும் நடவடிக்கைகளின் விளைவுகளை அவர்கள் தாங்கிக்கொள்ளவேண்டியுள்ளது" என்றுமாற்றுக்கொள்கைகளுக்கானநிலையத்தின்அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.**

**இந்த ஆய்வானது பகுதியளவில் கட்டமைக்கப்பட்ட வினாக்கொத்தைப் பயன்படுத்தி நாடளாவிய ரீதியில் சிங்களம், தமிழ், மலையகத் தமிழ் மற்றும் முஸ்லிம் ஆகிய நான்கு முக்கிய சமூகங்களைச் சேர்ந்த 1350 நபர்களை மாதிரியாகக்கொண்டு மேற்கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது.**

**இவ்வாய்வு முடிவுகளின்படி 94.1 சதவீதமானோர் அனைத்து அரசியல்வாதிகளும் கணக்காய்வுக்கு உட்படுத்தப்படுவதுடன் கணக்கில் வராத அவர்களது சொத்துக்கள் அனைத்தும் அரசுடைமையாக்கப்பட வேண்டும் எனத் தெரிவித்துள்ளனர். 94.5 சதவீதமானோர் தேர்தல்கள் உரிய நேரத்தில் நடத்தப்படவேண்டும் எனவும், 94.8 சதவீதமானோர் ஜனாதிபதி உட்படஅனைத்துஅரசியல்வாதிகளும்தமதுசொத்துவிபரங்களை வெளிப்படுத்தவேண்டும் எனவும், 95.2 சதவீதமானோர் பொருளாதார நெருக்கடிக்குக் காரணமானவர்கள்மீது தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் தெரிவித்துள்ளனர்.**

**குறிப்பாகப் பெரும்பான்மையான இலங்கையர்கள் அரசியல் தலைமையின் பொறுப்புக்கூறலை மேம்படுத்தப்படவேண்டும் என வலியுறுத்தியுள்ளனர்.**

**அதேவேளை நாட்டின் ஊழல் நிலைவரத்தைப் பொறுத்தமட்டில் 87.2 சதவீதமானோர் ஊழல் அதிகரித்திருப்பதாகவும், 8.1 சதவீதமானோர் பொருளாதார நெருக்கடி முன்பு இருந்ததைப்போன்றே தற்போதும் இருப்பதாகவும், 3 சதவீதமானோர் ஊழல் மோசடிகள் குறைவடைந்திருப்பதாகவும். 1.6 சதவீதமானோர் அதுபற்றித் தமக்குத் தெரியாது எனவும் பதிலளித்துள்ளனர்.**

**இந்தக் கருத்துக் கணிப்பு மக்களின் எண்ணவோட்டத்தை, அரசியல்வாதிகளுக்கு எதிரான அவர்களின் கருத்துக்களைத் தெளிவுபடுத்தியுள்ளது. மகிந்த ராஜபக்ச தலைமையிலான ஆட்சியாளர்களும்அதிகாரிகளுமே இலங்கையின் பொருளாதார இழிநிலைக்குக்காரணமானவர்கள் என்று நீதிமன்றம் ஏற்கனவே கைகாட்டி இருக்கின்றது. நாடாளுமன்றத்திலும் எதிர்க்கட்சிகள் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று வலியுறுத்தி–யுள்ளனர். இதன் உச்சக்கட்டமாக ராஜபக்சக்கள் குடும்பத்தினரின் குடியுரிமையைப் பறிக்கவேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது. இப்போது அதே கருத்தைப் பொது மக்களும் வலியுறுத்தியுள்ளனர்.**

**ஆனால், மக்களின் கருத்துக்களுக்கு இலங்கை அரசியல்வாதிகள் எந்தளவுதூரம் மதிப்பளிப்பார்கள் என்பது உலகம் அறிந்த விடயம்தானே. பொறுப்புக்கூ–றல் விடயத்தில் இலங்கையின் வரலாறு மிக மிக மோசமானது எனபது நிரூபிக்கப்பட்ட ஒன்று. குற்றவாளிகளைத் தப்பவிடும் போக்கும் இங்கு பிரபலமானது. அதனால் மக்களின் கருத்துக்களுக்கு மதிப்பளித்துபொருளாதாரக்குற்றங்களுக்குக்காரணமானவர்கள் மீது நடவடிக்கை ஆட்சியாளர்கள் நடவடிக்கை எடுப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியாது.**

**அந்தக் குற்றவாளிகளின் அனுசரணையுடனும் ஆசிர்வாதத்துடனேயே ஆட்சி நடக்கிறது என்பதால் அப்படி பொருளாதாரக் குற்றங்களுக்குக் காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று எதிர்பார்ப்பதே இங்கு ஒரு குற்றம் என்றுதான் சொல்வார்கள். விரைவில் இந்த நிலையில் மாற்றம் வேண்டும் என்றால் அடுத்துவரும் தேர்தல்களில் மக்கள் கவனமாக வாக்களித்து சரியானவர்களைத் தெரிவு செய்யவேண்டும்.**

## குழந்தைகளையும் பொம்மைகளையும்....

**இரா.கு.வேந்தன்**



ஐம்பதுகளின் மத்தியில் தொடங்கி, ஏறத்தாழ இருபதாண்டுகள் வியத்நாம் மீது அமெரிக்கா தொடர்ச்சியாகப் பெரும் போரை நடத்தியது. வீடுகள், மருத்துவமனைகள், பள்ளிக்கூடங்கள் என்று எந்த வித்தியாசமின்றிஅமெரிக்கப்போர் விமானங்கள், இரவும் பகலும் வியத்நாம் மீது குண்டுகளை வீசிக் கொண்டிருந்தன.

ஒருநாள் குழந்தைகள் விளையாடிக் கொண்டிருந்த பள்ளிக்கூட மைதானத்தில், அமெரிக்க விமானங்கள் குண்டுகளை வீசியதில் கொத்துக்கொத்தாகக்குழந்தைகள் மடிந்தனர். அச்சம்பவம் நடந்த இருவாரங்களுக்குப் பின்னர், அந்நாட்டில் குழந்தைகள் தினம் வந்தது. அப்போது, அதே அமெரிக்கப் போர்விமானங்கள் பள்ளிக்கூடமைதானங்களின்மீது தாழ்வாகப் பறந்து, பொம்மைகள் அடங்கிய பொதிகளை வீசிச் சென்றன. குண்டுவீச்சில் தன் குழந்தையைப்பறிகொடுத்ததாய் ஒருத்தி இதைப் பார்த்து மனம் வெதும்பி கண்ணீர் உகுத்து நின்றாள்.

இக்கண்ணீர்க் காட்சியைப் பார்த்த ஆஸ்திரிய கவிஞன் எரீக் ஃபிரீட்,

**இன்று வீசிய**
**பொம்மைகளைப்**
**பதினைந்து நாட்களுக்கு**
**முன்பும்**
**அன்று வீசிய குண்டுகளை**
**இன்றைக்கும்**
**வீசியிருந்தால்**
**என் குழந்தை பதினைந்து**
**நாட்கள்**
**பொம்மையோடு**
**விளையாடி விட்டாவது**
**செத்துப் போயிருக்குமே**

என்றுஓர் கவிதை வடித்தான்.

தற்போது இஸ்ரேலும் ஹமாஸும் அறிவித்திருக்கும் போர்நிறுத்தமானது, குழந்தைகளைக் கொன்று விட்டுத் திருவிழாவுக்குப்பொம்மைகளை வீசியகதையைப்போன்றதுதான். கடந்த ஒன்றரை மாதத்திற்குள் ஏறத்தாழ ஆறாயிரத்துக்கும் மேற்பட்டகுழந்தைகள்இப்போரில் மடிந்துவிட்டனர்.பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட குழந்தைகளும் ஆயிரக்கணக்கான பெண்களும் மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் உள்ளனர்.

குண்டு வீச்சில் தரைமட்டமான வீடுகளின் சிதிலங்களுக்குள் மாட்டிய குழந்தைகள் எண்ணிக்கை மட்டும் இரண்டாயிரத்தை நெருங்கும் என்கிறது ஐ.நா.சபை. ஒரு போரைத் தொடங்குவது என்பது எளிதான செயல்; ஆனால் அதை எந்தப் புள்ளியில் முடிப்பது என்பதுதான் விடையில்லாக் கேள்வி. உக்ரைன் மீது ரஷியா தொடுத்துள்ள போரே இதற்கான பெரும் சாட்சி.

இன்றைய நாகரிக நாடுகள் எல்லாம், தானிய உற்பத்தியில் ஈடுபடத் தவறினாலும், ஆயுத உற்பத்தி செய்ய மட்டும் தவறுவதேயில்லை.ஆயுதங்களை உற்பத்தி செய்யாத தேசம் வீரத்தில் குறைந்தது என்ற புதிய கோட்பாட்டை எழுதி வைத்துக் கொண்டு வளர்ச்சி அடைந்த நாடுகளும் வளர்ந்துவரும் நாடுகள் இப்பெரும் பாவத்தை ஆற்றி வருகின்றன.

இரண்டாம்உலகப்போருக்குப் பின்னர், ராணுவம், ஆயுத உற்பத்தி ஆகியவற்றில் இருந்து தள்ளியிருந்த ஜப்பான் கூட இப்போது மீண்டும் ஆயுத உருவாக்கம், ராணுவபலம் ஆகியவற்றில் கவனம் செலுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

பெரும் அருளாளர்கள்கொடையாக நல்கிய மார்க்கங்களைப் பெயரளவில் பின்பற்



றும் நாடுகள், அந்த அருளாளர்கள் காட்டிய கருணைப் பாதையில் ஓர் அங்குலம் கூட அடியெடுத்து வைப்பதில்லை. மாறாக, வாழ்வதற்காகத் தோற்றுவிக்கப்பட்ட உயிர்களை நாள்தோறும் உருவாக்கும் ஏவுகணைகளையும் குண்டுகளையும் கொண்டு இந்நாடுகள் உரசிப்பார்ப்பதுதான் சோகங்களிலும் சோகமானது.

போர்கள் உருவாக்கும் ஆற்றொணா வேதனைகளின் சுவடுகளை வரலாறு எப்போதும் உச்சரித்துக்கொண்டுதானுள்ளது. ஆனால், சமாதானத்தின் பக்கங்களை வாசித்திட போர் நேசர்கள் எப்போதும் ஆயத்தமாக இருப்பதில்லை.

'நள்ளிரவில் நூற்றுக் கணக்கான பெண்கள் மற்றும் குழந்தைகளின் அழுகுரல்கள் ஒலிக்கின்றன; ஓ! நாட்டில் போர் தொடங்கி விட்டது' என்கிறது சீன அனுபவ மொழி. போர் உண்டாக்கும் ரணங்களை எந்த சமாதானப்புறாவின் அலகில் இருக்கும் பூங்கொத்தினாலும் ஆற்றிடவே இயலாது.

எத்தியோப்பியா, சூடான், சோமாலியா, சிரியா, ஏமன், இலங்கை, ஆப்கானிஸ்தான், நைஜீரியா ஆகிய நாடுகளின் குண்டுகள் துளைத்த வாழ்க்கையே இதற்குச் சான்று. உண்மையில் நெடும் போர் ஒன்று முடிவடைகிறதருணத்தின் அடுத்த நொடியில், அப்போரை விட கொடுமையான வறுமை சூழ்ந்துகொண்டு மக்களைக் கொல்லத் தொடங்குகிறது.

இன்றும் தோட்டாக்களின் ஓசைகள் ஓயாமல் ஒலித்திடும் கறுப்புத்தேசம் - சூடான். போரால் சிதிலமான சூடானின் பல்லாயிரக்கணக்கான பெண்கள் மற்றும்குழந்தைகளின்கண்ணீர்த் துளிகள்எத்தனைநூற்றாண்டுகள் கடந்தாலும் உலராதவை.

அதில் ஒரு காட்சி, 1993-ஆம் ஆண்டில்உலகின் மனசாட்சியை உலுக்கியது. பசியும் வறுமையும் கூறு போட்ட எலும்புக்கூடு போலிருந்த ஒரு சிறுமி சூடானின் பாலைவன மணலில் ஊர்ந்தபடிச் செல்கிறாள். நடக்க இயலாமல் தவழ்ந்தபடி நகரும் அவளை ஒரு கழுகு பின் தொடர்கிறது. அவள் இறந்து விட்டால் உண்பதற்காக அக்கழுகு சிறுமியைப் பின் தொடர்கிறது. இதைக் கண்ட அமெரிக்கப் புகைப்படக்காரர் கெவின் கார்ட்டர், அக்காட்சியைப் படமெடுத்து 'நியூயார்க் டைம்ஸ்' பத்திரிகையில் வெளியிட்டார்.

அதுவரைபோரின்விளைவை இப்படியொரு கோணத்தில் பார்த்திராத உலகம் அதிர்ந்து போனது. போர்க்கொடுமையைச் சொன்ன உலகின் தலைசிறந்த புகைப்படத்திற்கான புலிட்சர் விருதினைக்கெவின்கார்ட்டருக்கு அப்படம் பெற்றுத் தந்தது.

ஆனால்இறந்துகொண்டிருந்த அச்சிறுமிக்குப் பையில் இருந்த தண்ணீரை வார்க்காமல் படமெடுத்த குற்றவுணர்ச்சி அழுத்தியதால், விருது பெற்ற சில நாட்களிலேயே 33 வயதேயான புகைப்படக்காரர் கார்ட்டர் தற்கொலை செய்து கொண்டார். ஒரு போர் எத்தனை புறவிளைவுகளை ஏற்படுத்தக்கூடும் என்பதற்கு இச்சம்பவம் ஓர் உதாரணம்.

இத்தகைய போர்க்களக் காட்சிகளைக்கண்டு உலகம் பல முறை திகைத்து நின்றிருக்கிறது. வியத்நாமில் கொத்துக்கொத்தாக குண்டுகள் வீசப்பட்டபோது அழுதுகொண்டேஓடிவந்தசிறுமி கிம் படம் வெளி வந்த போதும் உலகம் அழுதது.

சிரியாவின் போர்க்களத்



தொடர்ச்சி 5 ம் பக்கம்....

# குழந்தைகளையும் பொம்மைகளையும்....

4ம் பக்கத் தொடர்ச்சி....

திலிருந்து தப்பி ஓடிய அகதிகளின் படகு கவிழ்ந்து, சிறுவன் ஜாலன் உடல் கடலில் மிதந்த போதும் உலகம்விசும்பியது. இலங்கையின் இறுதிப்போரில்நூற்றுக்கணக்கானக் குழந்தைகள் டாங்கிச்சக்கரங்களின் கீழ்நசுக்கப்பட்டபோதும் இவ்வுலகம் மௌனமாகக் கண்ணீர் சிந்தியது. இவ்வாறாகக்கடந்தகாலவரலாற்றின் பக்கங்களின் மீது கனமான கண்ணீர்த் துளிகள் உறைந்துக் கிடக்கின்றன.



இருதரப்பினருக்கிடையேயான பூசல் என்ற அளவிலேயே போர்கள் பெரும்பாலும் புரிந்து கொள்ளப்படுகின்றது. நாடுகளைக் கடந்து படரும் போரின் ரணங்கள் நூற்றாண்டுகளைத் தாண்டியும் நீளும் அவலம் கொண்டவை. முதல் மற்றும் இரண்டாம் உலகப்போர்களில் தொலைந்து போன ஆயிரக் கணக்கானவர்களைத் தேடும் பணி அண்மைக்காலம் வரை தொடர்ந்தது.

கொரிய தீபகற்பத்தைப் போர்தான் இரண்டாகப் பிளந்தது. இருநாடுகளுக்குஇடையேகிழித்துப் போடப்பட்ட உறவுகள் பிரிந்தும் சந்தித்தும் அறுபதாண்டுகள் ஆகின்றன. முடிந்து போன போர்களின் சுவடுகளுக்குள் தேங்கியிருக்கும் ஏக்கங்களும் பெருமூச்சுகளும் பெரும்பாலும் வாசிக்கப்படாதபக்கங்களாகவேகால ஓட்டத்தில் கரைந்து விடுகின்றன.

இலங்கையில் போர் முடிந்து 14 ஆண்டுகள் ஆகின்றன. அந்நினைவுகளில் இருந்து மக்கள் கூடவெளியேறத்தொடங்கிவிட்டனர். ஆனால், இன்றும் வானத்தில் பயணிகள் விமானம் பறந்தால், அது குண்டு வீச வரும் விமானம் என்ணெி நாய்கள் தூர்ந்து போன பதுங்குக்குழிகளுக்குள் மறைந்து கொள்ளும்காட்சிகள்தொடர்கின்றன. மனித மனங்களில் மட்டுமின்றி, வாயில்லா உயிர்களின் வாழ்விலும் அழியாத அச்சங்களைப் போர்கள் தீட்டிச் சென்றுள்ளன.

இரக்கமற்ற வாழ்வின் இத்தகு அவலங்களை, உலக அறங்களின் தாயானதமிழ்இலக்கியம்எப்போதும் அடையாளம் காட்டி வந்துள்ளது. வீரத்தின் வலிமையைப் பேசும் புானூற்றுப் பாடல்கள், போரின் வலிகளைப் பேசத் தவறவில்லை. இரக்கத்தைத் தொலைத்து விட்டு, வெறும்எலும்புகளைக்கொண்டுஎந்த அரசாங்கத்தையும் கட்டியெழுப்ப இயலாதுஎன்னும்பேருண்மையைத் தமிழ்ப்படைப்புகள் உரத்துச் சொல்லியுள்ளன.

உலகப்பசியைத்தீர்ப்பதற்காகக் கிடைத்த அமுதசுரபியைக்கொண்டு வாடிய உயிர்களைக் காப்பாற்ற இயலாதசூழலில், ஆபுத்திரன்பட்டினி கிடந்து தன்னுயிரை இழக்கிறான். ஆனால், இப்பாத்திரம் நல்லவர்கள் கையில் சேரட்டும் என்னும் தூய பிரார்த்தனையுடன் அவன் தனது உயிரைக்காணிக்கையாக்குகிறான். அதனால்தான் பசி தீர்க்கும் அந்த கருணைப்பாத்திரம், வெற்று இன்பங்களை வெறுத்தொதுக்கித் தொண்டாற்ற விழைந்த மணிமேகலையின் கரங்களில் வந்து சேர்ந்தது.

காலநகர்வில் அப்பாத்திரம் காணாமல் போயிருந்தாலும், உயிர் இரக்கம் என்ற ஒப்பற்ற எண்ணம் தொடர்ந்து பயணித்துப் பின்னாளில் வள்ளலாரின் புனித உள்ளத்தில் நுழைந்தது. மண்ணுயிர்களையெல்லாம் நேசித்த அம்மகத்தான உள்ளத்தின் இரக்கவுணர்வு, ஒன்றரை நூற்றாண்டுகளுக்குமுன்வடலூரில் அடுப்பு ஒன்றினை ஏற்றி வைத்தது.

நெருப்பு என்பது பொதுவாக தன்னைச் சார்ந்த அனைத்தையும் அழித்து விடும் தன்மை கொண்டது. ஆனால் வடலூரின் பசிப்பிணி போக்கும் அடுப்பு மட்டும், நூற்றாண்டுகள் கடந்தும் கனல் வீசுவதுடன், பூமிளங்கும்பல்லாயிரம் பசி நீக்கும் அடுப்புகளை இன்றும் ஏற்றிக்கொண்டிருக்கின்றது.

கருணையும், இரக்கமும் கொண்ட எண்ணங்கள், காலங்களைக் கடந்தேறி, மானுடத்தை உயிர்ப்பிக்கும் மனிதனின் நெஞ்சைத் தேடிக் குடிகொள்ளும் என்று தமிழ் இலக்கியம் அற்புதமாக எழுதி வைத்துள்ளது.



இப்பேருண்மையை வாசித் தறியாத நாடுகளோ, எந்த நாட்டில் போர் நடந்தாலும் ஆயுதங்களை அள்ளியள்ளி விற்க முனைப்புடன் முன்நிற்கின்றன. ஆனால், போர்க்களங்களில் அமைதி திரும்பிடும்போதில், அங்கே ஒரு குண்டுமணி தானியத்தைக் கிள்ளி விதைத்திடவும் இந்நாடுகள் முன்வருவதில்லைஎன்பதுகசப்பான வரலாறு.

போர் நிறுத்தத்தின் இச்சிறு இடைவெளியில் போர்க்காதல் கொண்ட நாடுகள், கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைகளை மேலும் கூர் தீட்டிக்கொள்ளக் கூடும். இயந்திரத் துப்பாக்கிகளுக்குள் ஓயாமல் சிதறிடும் ரவைகளையும் நிரப்பிடலாம். ஆனால் உயிர்களைத் துளிர்க்கச்செய்திடும் சமாதானத்தின் பாடலுக்கான ஒரு சொல்லைக் கூட அவர்களால்கட்டியெழுப்பஇயலாது.

ஏனென்றால், இரக்கம் கசியும் ஈரமான சொற்கள் ஊற்றெடுப்பது அமுதசுரபியிலும் அணையா அடுப்புகளிலும்தான்! ஆயுதக்குவியல்களில் அன்று!

கட்டுரையாளர்: பேராசிரியர், தமிழ்ப் பல்கலைக்கழகம்.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road, Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Roty With Vegitable In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தி. புலமைப்பரிசில் மாணவன் கௌரவிப்பு



கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலையில் 7 வருடங்களுக்குப்பின்னர் தரம் - 5 புலமைப்பரிசிலில்அகிலன்ஆகாஷ் என்றமாணவன்175புள்ளிகளைப் பெற்று பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளார். இந்த மாணவனுக்கு பல்வேறு அமைப்புக்களின் உதவிக்கரத்தில் மிகப்பிரமாண்டமான கௌரவிப்பு நிகழ்வும் ஒளி விழாவும் நேற்று (வியாழக்கிழமை) பாடசாலையில் நடைபெற்றது.



பாடசாலை முதல்வர் திருமதி சைலினி பிரதீபன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக் கல்வி அலுவலக ஆரம்பப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் முரளிதரனும், சிறப்புவிருந்தினராக பங்குத் தந்தை திருச்செல்வம் அடிகளாரும்கௌரவவிருந்தினராக சுன்னாகம் லயன்ஸ் கழக உறுப்பினர்களானஊடகவியலாளர் லயன் சி.ஹரிகரன், தொழிலதிபர் லயன் க.டினேஸ் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவனுக்கு செல்வச்சந்நிதியான்ஆச்சிரமத்தால் சைக்கிள் ஒன்றும், சுன்னாகம் லயன்ஸ்கழகம்,கிருபாலேனேர்ஸ், சித்திவிநாயகர் புத்தகசோலை, ஸ்தாபகர் குடும்பம், ஹரே கிருஸ்ணா ஆலயம், கூட்டுறவு இன்சூரன்ஸ் ஆகியோரால் நிதியுதவி மற்றும் பரிசுப் பொருள்களும் வழங்கப்பட்டன. (05)

# மீண்டும் கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியில் ஆய்வு



கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியில் இருந்து தோண்டியெடுக்கப்பட்ட மனித எலும்புக்கூடுகளின் வயது பாலினம் ஆகியவற்றை அடையாளம் காண இம்மாதம் 21 ஆம் 22 ஆம் திகதிகளில் ஆய்வுகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக சட்ட வைத்திய அதிகாரியான கனகசபாபதி வாசுதேவா நீதிமன்றில் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு - கொக்குத் தொடுவாய் மனிதப் புதைகுழி தொடர்பான வழக்கு விசாரணைகள் முல்லைத்தீவுநீதிவான்நீதிமன்றத்தில் வெள்ளிக்கிழமை முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில் இடம்பெற்றது.

இதன்போது சட்ட வைத்திய அதிகாரி கனகசபாபதி வாசுதேவா, கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியில் இருந்து தோண்டியெடுக்கப்பட்ட மனித எலும்புக் கூடுகளின் வயது பாலினம் ஆகியவற்றை அடையாளம் காண இம்மாதம் 21ஆம் 22 ஆம் திகதிகளில் ஆய்வுகள்மேற்கொள்ளப்படவுள்ளதாக மன்றில் தெரிவித்தார்.

மேலும் கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வப் பணிகளின்போது இதுவரை 40 மனித எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# விசேட வைத்திய நிபுணர்கள் ஓய்வு வயது 63 ஆக நீடிப்பு

அரசாங்கத்தில் பணியாற்றும் விசேட வைத்திய நிபுணர்களின் ஓய்வு வயதை 63 ஆக நீடிக்க மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று (வெள்ளிக்கிழமை) உத்தரவிட்டுள்ளது.

அரசாங்கத்தில் பணியாற்றும் விசேட வைத்திய நிபுணர்களுக்கு 60 வயதில் ஓய்வு வழங்கும் அரசாங்கத்தின் தீர்மானத்தை எதிர்த்து வைத்தியர்கள்குழுரிட்மனுவொன்றை மேன்முறையீட்டுநீதிமன்றில்தாக்கல் செய்திருந்தது.

இந்த மனு மீதான வழக்கு நேற்று விசாரணைக்குஎடுத்துக்கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.அதற்கிணங்க, அரசாங்கத்தில்பணியாற்றும்விசேடவைத்திய நிபுணர்களின் ஓய்வு வயதை 63 ஆக நீடிக்க நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டுள்ளது. (05)

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City

எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!

இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!

உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்

முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்

SUPERMARKET

4th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557

## முன்னணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குரல் எழுப்பினர்.

தமிழ், சிங்கள மக்களின் இன நல்லு றவை சீர்கெடுக்கும் விதமாக இந்த இரு நாடாளுமன்றஉறுப்பினர்களும்வடக்கில் இருந்து வருகை தந் துள்ளதாகக் கூச்சலிட்ட எதிர்ப்பாளர்கள் தகாத வார்த்தைகளாலும் வைதனர். திரும்பிப்போஎன்றுகூச்சலிட்டனர். இதனை அடுத்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவரும் தமது பயணத்தைக் கைவிட்டுத் திரும்பினர்.

## ஹோட்டன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அண்மித்துக் காணப்படும் வனஜீவராசிகள் திணைக்களம் மற்றும் வனப் பாதுகாப்பு திணைக்களத்திற்கு சொந்தமான இடங்களை வரைபடத்தின் மூலம் மேற்பார்வை செய்த ஜனாதிபதிபதி, ஹோட்டன் சமவெளி தேசிய பூங்கா மற்றும் அதனைச் சார்ந்த பகுதிகளை உள்ளடக்கிய புதிய திட்ட வரைவொன்றை தயாரித்து விரைவில் தன்னிடம் கையளிக்குமாறும்அறிவுறுத்தினார்.

உள்நாட்டுவெளிநாட்டுசுற்றுலாப் பயணிகளின் அதிக கவனத்தை ஈர்த்துள்ளஹோட்டன்சமவெளியை அண்மித்த பகுதிகளை உயர்மட்ட சுற்றுலா பயணிகளை இலக்கு வைத்து அபிவிருத்தி செய்யும் பட்சத்தில்அதிகளவான வெளிநாட்டு வருவாயினைஈட்டிக்கொள்ளமுடியும் என்று ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். அந்தச்செயற்பாடுகள் அனைத்தும் சுற்றாடலுக்கு உகந்ததாகவும் நிலைபேறானதாகவும் இருக்க வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி விளக்கினார். வனப்பகுதியை அண்மித்து வாழும் மக்களின் வாழ்வாதார முறைமைகள்தொடர்பில்ஜனாதிபதி கேட்டறிந்துகொண்டதோடு, சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதால் மக்கள் வாழ்வாதாரத்தை பலப்படுத்த முடியும் என்றும் தெரிவித்தார்.

அதனையடுத்து உடவேரிய தோட்டத்தின்ஊடாகசரிவடைந்துள்ள வீதி மற்றும் அதனை அண்டிய பகுதிகளையும்ஜனாதிபதி மேற்பார்வை செய்தார். ஹோட்டன் சமவெளி தேசிய பூங்காவின் தலைமை பொறுப்பாளர் ஆர்.எம்.என்.கே.ரத்நாயக்க மத்திய மாகாண வனஉயிரிகள் உதவிப் பணிப்பாளர் ஜீ விக்ரமதிலக்க உள்ளிட்டவர்களும் இந்தப் பயணத்தில் கலந்துகொண்டனர்.

## கைதுகள்,...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திங்கட்கிழமை கொழும்பை வந்தடைந்த கொமியெர், பல தலைவர் களையும் சந்தித்துப் பேச்சு நடத்தி வருகின்றார்.

அவர் இலங்கையின் பல்லின சமூகங்கள் முகங்கொடுத்திருக்கும் சவால்களைக் கேட்டறிதல் மற்றும் அச்சவால்களை முறியடிப்பதற்கான கூட்டிணைந்த வாய்ப்புக்களை அடையாளங்காணல் ஆகியவற்றை இலக்காகக்கொண்டு மலையகம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளுக்கும் நேரில் சென்று பார்த்துள்ளார், பொதுமக்கள், சிவில் சமூகப்பிரதிநிதிகள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினருடனும் கலந்துரையாடல்களை முன்னெடுத்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனைவியாழக்கிழமை கொழும்பில் சந்தித்த டிஸிரி எம்.கொமியெர் ஸ்மித், மலையகப்பகுதிகளுக்கு தான் நேரடியாகச் சென்று பார்த்தார் எனவம் எனவே வட, கிழக்கு மாகாணங்களின் தற்போதைய நிலவரம் குறித் துத் தெளிவுபடுத்துமாறும் கேட்டுக் கொண்டார்.

அதற்குப் பதிலளித்த சுமந்திரன், குறிப்பாக வட, கிழக்கு மாகாணங்களில் இடம்பெற்று வரும் இனவாதப் போக்கிலான செயற்பாடுகளும், பெரும்பான்மையின சமூகம் பேரினவாதப் போக்கில் பயணிக்க முற்படுவதுமே இன ரீதியிலான பிரச்சினைகளுக்கு முக்கிய காரணமாக இருப்பதாகச் சுட்டிக்காட்டினார்.

அதேபோன்று அண்மையில் போரில் உயிரிழந்த அன்புக்குரியவர்களை நினைவுகூர்ந்தமைக்காகப் பலர் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்டமை மற்றும் வட, கிழக்கு மாகாணங்களில் தொடர்ந்து இடம்பெற்று வரும் காணி அபகரிப்புக்கள் என்பன பற்றியும், அவை இனவாத அடிப்படையிலேயே இடம்பெறுகின்றன எனவும் அவர் அமெரிக்க இராஜாங்கத்திணைக்களப் பிரதிநிதியிடம் எடுத்துரைத்தார்.

அவற்றைச் செவிமடுத்த கொமியெர் ஸ்மித், இதனை உரியவாறு கையாள்வதற்கு அமெரிக்க அரசு எத்தகைய உதவிகளை வழங்கமுடியும் எனவும் கேள்வி எழுப்பினார்.

அதற்குப் பதிலளித்த சுமந்திரன், அண்மையில் இடம்பெற்ற பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழான கைதுகள் தொடர்பில் அமெரிக்கா உடனடியாகக் கண்டனம் வெளியிட்டமை, 2012 ஆம் ஆண்டிலிருந்து ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை விவகாரத்தை நகர்த்துவதில்முன்னின்றுசெயற்பட்டுவருகின்றமை போன்றவற்றை உதாரணமாகக் கூறியதுடன், இவ்விடயத்தில் அமெரிக்கா இயலுமானதைச்செய்துவருகின்றது எனத் தெரிவித்தார்.

மேலும் தமிழ், முஸ்லிம், மலையக அரசியல்வாதிகளுக்கு இடையில் நிலவும் ஒற்றுமை குறித்து அமெரிக்கப் பிரதிநிதி கேள்வி எழுப்பியபோது, ஒவ்வொரு தரப்பினரதும் அடையாளங்கள் வேறுபட்டவையாக இருப்பினும், தமிழர்விவகாரம்என்றுவரும்போது அனைவரும் ஒருமித்தே செயற்படுகின்றனர் என்றும் சுமந்திரன் தெரிவித்தார்.

# லண்டனில் பல லட்சம் டொலர் பெறுமதியான நிறுவனங்களை சொந்தமாக்கிய அமைச்சர்

கடல் கடந்து பல சொத்துக்களை வைத்திருக்கும் நபர்கள்பட்டியலைபண்டோராஆவணம்வெளியிட்டுள்ள நிலையில் அதில் பொது பாதுகாப்பு அமைச்சர் டிரன் அலஸ் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

பொதுப் பாதுகாப்பு அமைச்சர் டிரன் அலஸ் லண்டனில் வர்ஜின் தீவுகளில் உள்ள இரண்டு நிறுவனங்களுக்குச்சொந்தக்காரர்என்பதைபுலனாய்வுப் பத்திரிகையாளர்களின் சர்வதேசக் கூட்டமைப்பான பண்டோரா பேப்பர்ஸ் வெளியிட்டுள்ளது.

200 இற்கும் மேற்பட்ட நாடுகளில் அரசியல்வாதிகள், பிரபலங்கள், வணிகர்கள் மற்றும் குற்றவாளிகளின் நிதி ஒப்பந்தங்கள் மற்றும் மறைக்கப்பட்ட சொத்துக்களை அம்பலப்படுத்தும் வகையில் பண்டோரா ஆவணம் பல விடயங்களை வெளியிட்டு வருகின்றது.

அதன்படி லண்டனில் 2006 இல் சுமார் 960,000 டொலருக்கு பொது பாதுகாப்பு அமைச்சர் ப்ரொம்ப்டன் ப்ரொப்பர்டீஸ் லிமிடெட் என்ற நிறுவனத்தை வாங்கினார் என்றும் 2008 ஆம் ஆண்டு பான்ஹாம் வென்ச்சர்ஸ் லிமிடெட் என்ற இரண்டாவது நிறுவனத்தை வாங்கினார் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கசிந்த ஆவணங்களில் உள்ள ஓர் அறிவிப்பின்படி, பி.வி.ஐ நிறுவனங்களுக்கு நிதியளிக்கப் பயன்படுத்தப்பட்ட நிதி, ஒரு தொழிலதிபராக டிரன் அலஸ்ஸிடம் இருந்து வந்ததைக் காட்டுகின்றது. (05)



# இலங்கைக்குவரும் மற்றுமொரு சீன ஆய்வு கப்பல்; பிராந்தியத்திற்கு அச்சுறுத்தல் என்கின்றது இந்தியா



அடுத்தாண்டு ஜனவரியில் சீனாவின் மற்றுமொரு ஆய்வுக் கப்பல் இலங்கைக்கு வரவுள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இதற்கானகோரிக்கையைசீனஅரசாங்கம்இலங்கை அரசாங்கத்திடம் விடுத்துள்ளதாக இந்துஸ்தான் டைம்ஸ் இணை யத்தளம் சுட்டிக்காட்டியுள்ளது.

சிங் யாங் ஹாங் 03 என பெயரிடப்பட்டுள்ள இந்த ஆய்வுக் கப்பல் ஜனவரி 5ஆம் திகதி முதல் மே மாதம் வரை இந்தியப் பெருங்கடலில் ஆய்வுப் பணியில் ஈடுபடும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்தகாலப்பகுதியில்இலங்கைமற்றும்மாலைதீவு துறைமுகங்களில் சீனக்கப்பல் நங்கூரமிடப்படும் என்றும் அதற்காக இலங்கை மற்றும் மாலைதீவு அரசாங்கத்திடமும் கோரிக்கை விடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும்,குறித்தகப்பலுக்குகடல்ஆய்வுநடவடிக்கைகளுக்கு அனுமதி வழங்குவது பிராந்தியத்தின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமையும் என இந்திய அரசாங்கம் கவலை வெளியிட்டுள்ளது.

(05)






## வவுனியாவில் மாணவியை தாக்கிய ஆசிரியர் கைது

வவுனியாவில் கடந்த சில நாள்களுக்கு முன்னர் உயர்தரம் கற்கும் மாணவியொருவர் ஆண் ஆசிரியரால் தாக்கப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

இந்தச் சம்பவத்தையடுத்து மன உலைச்சலுக்கு உள்ளான மாணவி தனது உயிரை மாய்க்க முயற்சி செய்திருந்த நிலையில் குடும்பத்தினரால் காப்பாற்றப்பட்டார்.

இந்நிலையில் குறித்த ஆசிரியரைக்கைதுசெய்தவவுனியா – ஈச்சம் குளம் பொலிஸார் அவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போது அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (05)

## போதைப்பொருளுடன் ஒருவர் தொட்டலங்கவில் கைதானார்

ஐஸ் போதைப்பொருள் கடத்தியதாகசந்தேகிக்கப்படும்பெண் ஒருவரை பேலியகொடை குற்றப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

தொட்டலங்கவில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பில் ஒன்றிலிருந்து சந்தேகநபர் இந்தக் கடத்தலை மேற்கொண்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கைது செய்யப்படும் போது சந்தேக நபர் சுமார் 15 லட்சம் ரூபா பெறுமதியான 100 கிராம் 100 மில்லிகிராம்ஐஸ்போதைப்பொருளை வைத்திருந்தார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கிம்புலா-எல குணாவின் சகோதரர் ஷிவா தலைமையிலான குழுவைச் சேர்ந்த 56 வயதுடைய காந்திஎன்றபெண்ணே சந்தேகத்தில் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபர்அளுத்கடைநீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதன் பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (05)

## கேரளகஞ்சாவுடன் ஒருவர் சிலாபத்தில் கைதானார்

ஒரு கிலோ 650 கிராம் கேரள கஞ்சாவை வைத்திருந்த 25 வயதுடைய நபர் ஒருவர் சிலாபம் பொலிஸாரால்கைதுசெய்யப்பட்டார்.

வியாழக்கிழமை சிலாபம் குமாரகட்டுவ என்றபகுதியில் விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே இவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதானவர் சிலாபம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

## சீரற்ற வானிலையால் கிளிநொச்சியில் 394 குடும்பங்கள் கடுமையாக பாதிப்பு

*கிளிநொச்சி மாவட்டத்தில் நிலவி வரும் சீரற்ற வானிலையால் 394 குடும்பங்களை சேர்ந்த 1234 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*இது குறித்து மாவட்ட இடர் முகாமைத்துவ பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் ’சீரற்ற வானிலையால் கிளிநொச்சியில் 9 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.குறிப்பாக கரைச்சி மற்றும் கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுகளே சீரற்ற வானிலையால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.*

*குறிப்பாக கரைச்சி பிரதேச செயலாள் பிரிவில், 54 குடும்பங்களை சேர்ந்த 186 பேர்பாதிக்கப்பட்டுள்ளதுடன் கண்டாவளை பிரதேச செயலாள் பிரிவில், 340 குடும்பங்களை சேர்ந்த 1048 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்’ இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. (05)*

# மனநோயாளிகளுக்கான சிகிச்சை குறித்து மனித உரிமைகள் ஆணைக்குழு கவலை

இலங்கையில் மனநோயாளிகள் மிகக் கடுமையான நெருக்கடிகளை எதிர்கொள்கின்றனர் என மனித உரிமைகள் ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையொன்று அதிர்ச்சியளிக்கும் வகையில் தெரிவிக்கிறது.

மன நோயாளிகளுக்கு அளிக்கப்படும் சிகிச்சையின்போதான சில நடவடிக்கைகள் மற்றும் வசதிகள் இல்லாமை 'சித்திரவதைக்கு ஒப்பாகும்' என்றும் அந்த அறிக்கை சாடியுள்ளது.

மன நோயாளிகளின் மனித உரிமைகள் மீறப்படுகின்றமை தொடர்பில் தமது ஆழ்ந்த கவலையை வெளியிட்டுள்ள இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, அவர்களின் நல்வாழ்வு தொடர்பு புதிய வழிகாட்டு நெறிமுறைகளை வெளியிட்டுள்ளது.

அதன் இடைக்கால அறிக்கை மற்றும் வழிகாட்டல்கள் சர்வதேச மனித உரிமைகள் தினமான கடந்த டிசெம்பர் 10 ஆம் திகதி வெளியானது.

அந்த இடைக்கால அறிக்கையில் மனநலம் தொடர்பில் நாட்டில் புதிய சட்டமொன்று இயற்றப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

இலங்கையின் தேசிய மனநல நிறுவனத்தில் ஊழியர்களின் தவறான நடவடிக்கைகள் மற்றும் நிர்வாகம் தொடர்பில், அந்த ஆணைக்குழுவுக்குகிடைக்கப்பெற்ற முக்கிய முறைப்பாடுகளை அடுத்தே அவர்களின் இந்த கவலையும் அறிக்கையும் வெளியாகியுள்ளது.

அவர்களது கண்டுபிடிப்பில் சில விடயங்கள் அதிர்ச்சியளிக்கக்கூடிய வகையில், நோயாளிகளை இழிவுபடுத்தும் வகையில் இருந்துள்ளன.

கண்காணிப்பு கமராக்கள் இல்லாத இடங்களில் ஊழியர்கள் நோயாளிகளை அடிப்பது போன்ற முறைப்பாடுகள் அந்த ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டிருந்தன. அதுமாத்திரமின்றி, ஊழியர் ஒருவரின் நடவடிக்கை காரணமாக நோயாளி ஒருவர் உயிரிழந்ததும் அவர்களது அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தமக்கு அளிக்கப்பட்ட முறைப்பாடுகளை அடுத்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, மன நோயாளிகளின் நலன் மற்றும் சுதந்திரம் குறித்து முன்னெடுத்த உண்மையைக் கண்டறியும் நடவடிக்கையின் ஒரு பகுதியாகவே இந்த அறிக்கை வந்துள்ளது.

இதையடுத்து, அந்த ஆணைக்குழு சுகாதார அமைச்சு, தேசிய மனநல நிறுவனம், இலங்கை பொலிஸ் மற்றும் சிறைச்சாலை திணைக்களம் ஆகியவற்றுக்கு புதிய வழிகாட்டு நெறிமுறைகளை விடுத்துள்ளது.

அதன்படி, சர்வதேச மருத்துவ தரம் மற்றும் அரசின் மனித உரிமைக்கடப்பாடுகள் ஆகியவற்றின் அடிப்படையில், மனநலச் சட்டம் ஒன்று இயற்றப்படுவதற்கு உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தனது வழிகாட்டு நெறிமுறைகளின் ஒரு பகுதியாகப் பரிந்துரை செய்துள்ளது.

11 பக்கங்கள் கொண்ட விரிவான இந்த ஆவணம் அந்த ஆணையத்தின் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. பின்னர் இது பொது வெளியிலும் வெளியானது.

'குறிப்பிடத்தக்க கவலைகள்' என அந்த ஆணைக்குழு கூறுவது தொடர்பில், மன நல நோயாளிகளின் புனர்வாழ்வு காலத்தில் அரசு அவர்களின் நல்வாழ்வு பேணப்படுவதை உறுதி செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.

அத்தோடு, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு எழுப்பியுள்ள கவலைகளில் நோயாளிக்கான தண்ணீர் வசதிகள், உணவு, இடவசதி, வைத்தியசாலைகள் மற்றும் பராமரிப்பு மையங்களில் சிகிச்சை, அதை அளிப்பவர்களின் நடவடிக்கை ஆகிய விடயங்களை பிரதானமாக உள்ளடக்கியுள்ளது.

மன நோயாளிகளின் மனித உரிமைகள் தொடர்ச்சியாக மீறப்படுவது குறித்து, தனது ஆழ்ந்த கவலையை ஆணைக்குழு எழுப்பியுள்ளது.

அதேவேளை, பல சந்தர்ப்பங்களில் உரிய கல்வித்தகுதி இல்லாதவர்கள் நோயாளர்களுக்கு சிகிச்சை அளிக்கின்றனர். ஆண் நோயாளிகள் தங்கியுள்ள பிரிவுகளில் பெருபான்மையாக பெண் தாதியரே உள்ளனர்.

அந்த சமயத்தில் நோயாளிகளின் பராமரிப்பு என்பது உரிய பயிற்சி இல்லாத உப சேவகர்கள் மூலமே செய்யப்படுகிறது.

எனவே, நோயாளிகளின் பராமரிப்பு எந்தளவுக்குக் காத்திரமாக உள்ளது என்பது பற்றி கேள்வி எழுந்துள்ளது. அதுமட்டுமின்றி, பெரும்பாலான நேரங்களில் உபசேவகர்கள் நோயாளிகளைக் கையாள்வதில் நிலவும் வழிகாட்டல்களை ஏற்று நடக்க மறுக்கின்றனர்.

முறையாக நிர்வகிக்கப்படாத சிகிச்சைக்கு அப்பாற்பட்டு, மாற்று வைத்திய சிகிச்சைகள் அளிக்கப்படுவது குறித்தும் கவலைகள் எழுப்பப்பட்டுள்ளன. அப்படியான மாற்று சிகிச்சை முறைகள் பக்கவிளைவுகளை ஏற்படுத்தும் என்ற குற்றச்சாட்டுகளும் உள்ளன.

அத்துடன், சிகிச்சை அளிப்பதிலுள்ள குறைபாடுகள் தொடரும் அதேவேளை, தேசிய மனநல நிறுவனத்தில் பல மருந்துகள் தரமில்லாமலும் இருந்துள்ளன. அந்த மருந்துகள் கையிருப்பில் இல்லாதபோது, சிகிச்சைக்கு மாற்று வழிமுறைகள் கையாளப்படுகின்றன. எனினும், உயர்தர மருந்துகள் கையிருப்பில் இல்லாத நிலையில், இப்படியான மாற்று வைத்திய வழிமுறைகளில் கூடுதலான பக்கவிளைவுகள் உள்ளன.

இவை மட்டுமின்றி, மனநல நோயாளிகளுக்கான வைத்திய சிகிச்சை கட்டணமும் கவலையை ஏற்படுத்தி நெருக்கடியை மேலும் அதிகரிக்கச் செய்கிறது என மேலும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

உயர்ந்த கட்டணம் காரணமாக வைத்தியசாலையில் இருந்து விடுவிக்கப்பட்ட நோயாளிகள் மருந்துகளை வாங்கச் சிரமப்படுவதால், அவர்கள் நோய்வாய்ப்பட்டு மீண்டும் வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெறும் சூழல் ஏற்படுகிறது.

தண்ணீர் வசதி, சுகாதாரம் ஆகிய இரண்டும் முக்கியமான கவலைகளாக அந்த ஆணைக்குழுவால் அடையாளம் காணப்பட்டுள்ளன.

மன நோயாளிகள் அறியாமல் தமது உடைகள் மற்றும் படுக்கை விரிப்புகளை அழுக்காகிவிடக்கூடும். அதை உடனடியாக சுத்தம் செய்ய தடையில்லா தண்ணீர் விநியோகம் தேவை. இந்த 'தொடர்ச்சியான தண்ணீர் விநியோகம்' தேசிய மனநல நிறுவனத்தில் சீராக இல்லாதது மட்டுமின்றி, அவர்களின் தண்ணீரை சேமித்து வைக்க வசதியும் இல்லை. அது பல அசௌகரியங்களை ஏற்படுத்துகிறது. அதிலும் குறிப்பாக, தண்ணீர் விநியோகம் நிறுத்தப்படும் போது அது மேலும் சிக்கலாகிறது என அந்த அறிக்கை மேலும் கூறுகிறது.

தொடர்ச்சியாக, தண்ணீர் வசதி இல்லாததொரு சூழலுக்கு அப்பாற்பட்டு, நுளம்புக்கடியிலிருந்து நோயாளிகளைப் பாதுகாப்பதும் தேசிய மனநல நிறுவனத்தில் சவாலாக உள்ளது. தற்கொலை அபாயம் காரணமாக நுளம்புவலைகள் பயன்படுத்தப்படுவதில்லை.

'முன்னர் நுளம்பு மருந்து அடிப்பது போன்ற தொழில்நுட்பங்கள் கையாளப்பட்டாலும், இப்போது அப்படி எந்த நடவடிக்கையும் எடுக்கப்படுவதில்லை. இது மட்டுமல்லாமல் தடயவியல் பிரிவில் மூட்டைப்பூச்சிகளின் இருப்பும் தொடரும் ஒரு பிரச்சினையாக உள்ளது'.

மனநோயாளிகளைச் சமாளிப்பதிலும் அவர்களுக்கு வைத்தியம் அளிப்பதிலும் மொழிப் பிரச்சினை ஒரு பெரும் தடங்கலாக உள்ளது. தேசிய மனநல நிறுவனத்திலுள்ள பெரும்பாலான ஊழியர்கள் தமிழ் பேசும் நோயாளிகளிடம் தொடர்பாடல்களை மேற்கொள்வதில் சவால்களை எதிர்கொள்கின்றனர் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கூறுகிறது. நோயாளிகள் என்ன கூறுகிறார்கள் என்பதை ஊழியர்கள் புரிந்துகொள்ள முயன்றாலும், தொடர்பாடல் பிரச்சினைகள் நிலவுகின்றன என்று கூறும் அந்த ஆணைக்குழு, இப்போது வெளியிட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளில் ஊழியர்களுக்கான தமிழ்மொழிப் பயிற்சி அளிப்பதையும் பரிந்துரை செய்துள்ளது.

தேசிய மனநல நிறுவனம் இதர நோயாளிகளிடம் உதவி கோரும் அதேவேளை, உபசேவகர்கள் 'கூகிள் மொழிபெயர்ப்பு' போன்ற தொழில்நுட்பங்களையும் பயன்படுத்துகின்றனர் எனவும் அந்த ஆணைக்குழு, 'எனினும் நோயாளிகன் தேவைகளை துல்லியமாக அறிந்துகொள்ள அவர்களால் முடியுமா என்பது தெளிவாக இல்லை' என்றும் கூறியுள்ளது.

மன நோயாளிகளைக் கையாள்வதில் இப்படியான சவால்கள் இருக்கும் சூழலில், இலங்கையில் 'புதிய மனநல வைத்திய சட்டம்' ஒன்று தேவை எனவும் அச்சட்டம் சர்வதேச தரத்துக்கு அமைவாக இருக்க வேண்டும் என்றும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது. இந்த விடயம் இலங்கையின் சுகாதார அமைச்சுக்கான முன்னுரிமை வழிகாட்டலாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அங்கொடையிலுள்ள தேசிய மனநல நிறுவனத்திலுள்ள நிர்வாகக் கட்டமைப்பு தொடர்பிலும் அந்த வழிகாட்டல்கள் கவனம் செலுத்தியுள்ளன.

இலங்கையிலேயே மனநல வைத்தியத்துக்கான மிகப்பெரிய மையமாக அங்கொட வைத்தியசாலை காணப்படுவதோடு, அங்கேயே அதிகளவானோர் உள நோயாளிகளாக அனுமதிக்கப்படுகின்றனர்.

தேசிய மனநல நிறுவனத்தில் நோயாளிகள் மற்றும் அவர்களது குடும்பத்தாருக்கு மேம்பட்ட உணவு வழங்கல் மற்றும் குறை தீர்க்கும் வழிமுறைகளை நடைமுறைப்படுத்துவது ஆகியவையும் மனித உரிமைகள் ஆணைக்குழுவால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

அவர்கள் விடுத்துள்ள வழிகாட்டல்களின் ஒரு பகுதியாக அந்த வைத்தியசாலையில் பொலிஸ் காவல் மையம் ஒன்றையும், மனநோய் உள்ள சிறைக்கைதிகளின் பாதுகாப்பை உறுதி செய்ய சிறைக்காவலர்கள் அங்கொட வைத்தியசாலையில் இருப்பதையும் உறுதி செய்ய வேண்டும் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கூறியுள்ளது. (05)

# இலங்கையில் டென்மார்க் முதலீட்டை அதிகரிக்க நடவடிக்கை முன்னெடுப்பு



பிரதமர் தினேஷ் குணவர்தனவுக்கும் டென்மார்க் தூதுவர் ஃப்ரெடி ஸ்வெயினுக்கும் இடையிலான சந்திப்பொன்று அலரிமாளிகையில் இடம்பெற்றது.

இலங்கைக்கும் டென்மார்க்கிற்கும் இடையிலான இருதரப்பு உறவுகள் மற்றும் அபிவிருத்தி ஒத்துழைப்பு தொடர்பான கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதற்காக இந்தச் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

புதுடில்லியில் வசிக்கும் டென்மார்க் தூதுவர் ஆயிரத்துக்கும் மேற்பட்ட வேலை வாய்ப்புகளை வழங்கக்கூடிய கோபன்ஹேகனில் உள்ள ஒரு பெரிய டென்மார்க் நிறுவனமான ஜி.பி.வி இன் இலத்திரனியல் உற்பத்தி தொழிற்சாலையை இலங்கையில் திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டதாகத் தெரிவித்தார்.

டென்மார்க்கில் பல முதலீட்டாளர்கள் எரிசக்தி துறை, ஆழ்கடல் மீன்பிடி, இயந்திர படகு, உற்பத்தி மற்றும் ஏனைய திட்டங்களில் முதலீடு செய்யத் தயாராக இருப்பதாக அவர் கூறினார்.

நாட்டின் தற்போதைய பொருளாதார வளர்ச்சி, சர்வதேச நாணய நிதியத்தின் நிதிப் பொதியின் முன்னேற்றம் உள்ளிட்டவை குறித்து டென்மார்க் தூதரிடம் பிரதமர் தெரிவித்தார்.

முதலீட்டை ஊக்குவிப்பதன் மூலம் டென்மார்க் இலங்கையின் மீது வைத்திருக்கும் நம்பிக்கைக்கும் நன்றி தெரிவித்த பிரதமர், பொருளாதாரத்தை புத்துயிர்பெறச்செய்வதற்கான இலங்கையின் முயற்சிகளுக்கு ஆதரவளிக்க பாரிஸ் கழகத்தின் உறுப்பினர் என்ற முறையில் வழங்கிய ஆதரவை நினைவு கூர்ந்தார்.

கொள்கலன் ஊக்குவிப்பு மையமாக இலங்கையின் கப்பல் போக்குவரத்தை விரிவுபடுத்துவதற்கான முயற்சி குறித்தும் அவர்கள் கலந்துரையாடினர்.

இலங்கையில் கறுவா மற்றும் ஏனைய வாசனைப் பொருள்களின் ஏற்றுமதியை அதிகரிப்பதற்கான வசதிகளை டென்மார்க் வழங்குமாறும் பிரதமர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த நிகழ்வில் பிரதமரின் செயலாளர் அனுர திஸாநாயக்க மற்றும் டென்மார்க் தூதரக அதிகாரி ருச்சி டி சில்வா ஆகியோர் கலந்துகொண்டனர். (05)

# பிறந்து ஒரு நாளேயான குழந்தை சடலமாக மீட்பு

மஹியங்கனை பொலன்னறுவை வீதியின் அலுத்தரம பிரதேசத்திலுள்ள பஸ் நிலையத்திற்கு அருகில் பிறந்து ஒரு நாளேயான குழந்தை ஒன்று சடலமாக மீட்கப்பட்டுள்ளது.

குறித்த சடலமானது கறுப்பு நிற பையொன்றால் சுற்றியிருந்த நிலையில் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

குழந்தையின் சடலம் மஹியங்கனை ஆதார வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அழுத்தரம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# மட்டு.வில் குரங்குகள் அட்டகாசம் சேதமடைகின்றன வீட்டு கூரைகள்

## பொதுமக்கள் கவலை



மட்டக்களப்பு மாவட்ட வரலாற்றில் குறிப்பாக காத்தான்குடி நகர சபை பிரிவில் குரங்குகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளதால் பொது மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

பெரும் எண்ணிக்கையிலான குரங்குகள் கூட்டம் கூட்டமாக வீட்டுக் கூரைகளின் மீது ஏறிப் பாய்வதால், தற்போதைய பருவமழை காலத்தில் நனைந்து ஈரத்தன்மையுடன் காணப்படும் ஓடுகள் உடைந்து நீர் ஒழுக்கு காணப்படுவதாகக் கவலை தெரிவிக்கின்றனர்.

அதேவேளை அங்கே மக்கள் தமது தேவைக்காக வைத்திருக்கும் பழங்கள் உள்ளிட்ட உணவுப் பொருள்களையும் குரங்குகள் சாப்பிட்டுவிடுவதாகவும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால், இந்த குரங்குகளின் அட்டகாசத்தை கட்டுப்படுத்த மாவட்ட வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (05)


JRIDE
BEYOND THE ROAD
ஜே ரைட்
ஒன்லைன் ரக்சி அப்
ONLINE TAXI APP FROM JAFFNA
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
இப்போது Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
Google Play
App Store
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk
+94 21 222 8358

காலைக்கதிர் Kalaikkathir

# யாழ். கீரிமலை ஜனாதிபதி மாளிகை காணியை அளவீடு செய்ய எதிர்ப்பு

யாழ்ப்பாணம் கீரிமலை பகுதியில் காணி அளவீட்டுக்கு சென்ற நில அளவைத் திணைக்களத்தினருக்கு எதிராக காணி உரிமையாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கீரிமலை ஜனாதிபதி மாளிகை அமைந்துள்ள பகுதியை நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் கையளிக்கும் நோக்கில் வெள்ளிக்கிழமை அளவீடு செய்யப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

இதனையடுத்து ஒன்றுகூடிய காணி உரிமையாளர்கள், நில அளவை திணைக்களத்தினரின் வாகனத்தைமறித்துகோஷங்களை



எழுப்பிபோராட்டத்தில்ஈடுபட்டனர்.

தெல்லிப்பழை பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள நகுலேஸ்வரம் (ஜே-226), காங்கேசன்துறை (ஜே-233) கிராம சேவகர் பிரிவுகளில் 29 ஏக்கர் நிலம் அளவீடு செய்ய தீர்மானிக் கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# கையடக்க தொலைபேசிகளின் விலைகள் அதிகரிக்குமாம்

நாட்டில் பெறுமதி சேர் வரி 18 சதவீதமாக அதிகரிக்கப்பட்ட பின்னர் கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் தொலைபேசி பாகங்களின் விலைகள் அதிகரிக்கப்படும் என இலங்கை தொலைபேசி விற்பனை நிலைய உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் இலங்கை தொலைபேசி விற்பனை நிலைய உரிமையாளர்கள் சங்க தலைவர் இந்திரஜித் பெரேரா தெரிவிக்கையில் –

இவ்வாறு அதிகரிக்கப்படும் பொருள்களின் விலைகள் தொடர்பில் இலங்கை தொலைபேசி விற்பனை நிலைய உரிமையாளர்கள் சங்கம் தீர்மானிக்க முடியாது.

கையடக்கத் தொலைபேசிகள் மற்றும்தொலைபேசியின்பாகங்களின் விலைஅதிகரிக்கப்படுவதால்நுகர்வோர் மாத்திரம்அல்லவிற்பனையாளர்களும் பாதிக்கப்படுகின்றனர்.

இந்தக் காலகட்டத்தில் கையடக்கத் தொலைபேசிகள் அடிப்படை தேவையாக மாறிவிட்டதோடு அதன் துணைக் கருவிகள் மற்றும் பாகங்கள் முக்கியமான பொருள்களாகக் காணப்படுகின்றன.

கையடக்கத் தொலைபேசிகளின் விலை உயர்வுக்கு பின்னர் பாடசாலை பொருள்களின் விலையும் அதிகரிக்கப்படும். இதனால் கல்வித் துறையும் பாதிக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (05)

# 6 கிலோ ஆமை இறைச்சியுடன் பாஷையூரில் ஒருவர் கைது



யாழில்சுமார்6கிலோகிராம்ஆமை இறைச்சியுடன் ஒருவர், பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பாசையூர் பகுதியில் நபர் ஒருவர் ஆமை இறைச்சியுடன் நடமாடுவதாக பொலிஸ் புலனாய்பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்தே இக்கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக் கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இதுகுறித்த மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (05)

# யா எல தேசிய பூங்காவில் திடீரென்று வெளிப்பட்டு வாகன கண்ணாடி உடைத்து உணவு தேடிய யானை

இலங்கையில் யா எல தேசிய பூங்காவில்சுற்றுலாப்பயணிகளின் வாகனமொன்றிற்குள் யானையொன்று தும்பிக்கையால் உணவைத் தேடுவதைக் காண்பிக்கும் வீடியோ வெளியாகியுள்ளது.

மேற்கு ஆஸ்திரேலியாவிலிருந்து இலங்கைக்கு சுற்றுலாப்பயணத்தை மேற்கொண்டவர்களே இந்த அனுபவத்தை எதிர்கொண்டுள்ளனர்.

அவர்கள்சென்றவாகனத்தைத் துரத்திவந்த யானை வாகனத்தின் கண்ணாடியை உடைத்து உணவைத் தேடியுள்ளது.

யா எல தேசிய பூங்காவில் மரங்களிற்கு இடையிலிருந்து வெளிவந்த யானை கசுன் பசநாயக்கவும் அவரது குடும்பத்தினரும் காணப்படும் வாகனத்தை நோக்கி செல்வதையும் அதன் பின்னர் தனது தும்பிக்கையால் வாகனத்தின் கண்ணாடியை உடைத்துதும்பிக்கையை உள்ளே விட்டு எதையோ தேடுவதையும் காண்பிக்கும் வீடியோக்கள் வெளியாகியுள்ளன.

யானை எங்கள் காலிற்கு அருகில் உணவைத் தேட தொடங்கியது வாகனச்சாரதி எதனையாவது கொடுக்குமாறு கேட்டுக்கொண்டார் நாங்கள் எஞ்சியிருந்த சான்ட்விச்சினை கொடுத்தோம் என கசுன் தெரிவித்துள்ளார்.

ஏனையவற்றை வெளியே வீசுங்கள் என்றார் அதன் பின்னர் நாங்கள்அங்கிருந்துதப்பிவந்தோம் சான்ட்விச்களும் சிப்ஸ்களுமே எங்களைக் காப்பாற்றியுள்ளன எவருக்கும் காயம் இல்லை என அவர் தெரிவித்துள்ளார். (05)

# வடக்கு மாகாணப் பாடசாலைகளில் பிளாஸ்டிக் பொருள்களுக்குத் தடை

## ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் அதிரடி



'பாடசாலைகளுக்குள்மாணவர்கள் பிளாஸ்டிக் பொருள்களைக் கொண்டு செல்வதற்குத் தடைவிதிக்கவேண்டும்' என வட மாகாண ஆளுநர் பி.எஸ். எம்.சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

வட மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தலைமையில் நடைபெற்ற மீளாய்வு கூட்டத்தின் போதே அவர் இவ்வாறு தெரிவித் துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் –

தினமும் காலை கூட்டத்தின் போது டெங்கு ஒழிப்பு தொடர் பில்மாணவர்களுக்குவிழிப்புணர் வூட்ட வேண்டும்.

அத்துடன், மாகாணத்திலுள்ள அனைத்து அரச திணைக்களங் களிலும் வாராந்தம் துப்புரவுப் பணிகளைமேற்கொள்ளதிணைக் கள தலைவர்கள் அறிவுறுத்தல் வழங்க வேண்டும்.

அத்துடன் வடக்கு மாகாணத் திற்குள் காணப்படும் தனியார் வைத்தியசாலைகளில் கடமைபுரியும் அரசவைத்தியர்களும்,டெங்குகாய்ச்சல் தொடர்பில் சமூக அக்கறையுடன் செயற்பட வேண்டும். – இவ்வாறு ஆளுநர் பணிப்புரை விடுத்துள்ளார். (05)

# கைப்பற்றப்படும் போதைப்பொருள்கள் உடன் அழிக்கப்பட்டு விடுகின்றனவாம்

## தேசபந்து தென்னக்கோன் விளக்கம்



பொலிஸாரால் கைப்பற்றப் படும் போதைப்பொருள்களுக்கு என்ன நடக்கின்றது என்பது குறித்து பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் விளக்கமளித்துள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் –

'பொலிஸாரால் கைப்பற்றப்படும்போதைப்பொருள்களுக்கு என்னநடக்கின்றதுஎன்றமாபெரும் பிரச்சினை பொதுமக்களுக்கு இருக்கின்றது.

குறித்த போதைப்பொருள்கள் மீண்டும் போதைப்பொருள் வியாபாரிகளைச் சென்றடைகின்றது என்ற பிழையான கருத்தும் மக்களிடையே காணப்படுகின்றது.

அதேபோன்று இவ்வாறான சில சம்பவங்களும் பதிவாகியிருக்கின்றன.

ஆனால் இதன் பின்னர் போதைப்பொருள் கடத்தல் காரர்களிடம் இருந்து கைப் பற்றப்படும் போதைப் பொருள்கள் மிகவும் குறுகிய காலத்தில்அழித்துவிடநடவடிக்கை எடுக்கப்படும்' என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (05)

# வடக்கில் வேகமாகப் பரவி வரும் ' வெண் முதுகுத் தத்தியின் தாக்கம்



வட மாகாண ரீதியில் நெற் பயிரில் வேகமாக பரவி வரும் 'வெண் முதுகு தாவரத்தத்தியின்' தாக்கத்தைக் கட்டுப்படுத்தும் வகையில்,விசேட கூட்டமொன்று மன்னார் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது.

மன்னார்மாவட்டஉதவிஅரசாங்க அதிபர் தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் வட பிராந்திய விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி நிலைய உதவி பணிப்பாளர் எஸ். ராஜேஷ் கண்ணா, பிரதேச செயலாளர்கள், விவசாய திணைக்கள பிரதி நிதிகள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

இதன்போது ' குறித்த நோய்த் தாக்கத்தால் யாழ் மாவட்டத்தில் 5,000 ஹெக்டேயர் நிலப்பரப்பும், கிளிநொச்சி மாவட்டத்தில் 800 ஹெக்டேயர் நிலப்பரப்பும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 650 ஹெக்டேயர் நிலப்பரப்பும்,வவுனியா மாவட்டத்தில் 700 ஹெக்டேயர் நிலப் பரப்பும் பாதிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக் கப்பட்டது. (05)

இதேவேளை மன்னார் மாவட்ட விவசாயிகளின் கவனத்திற்கு கொண்டுசெல்லும் வகையில் குறித்த கலந்துரையாடல் இடம்பெற்றபோதும் குறித்த நோய் தாக்கம் குறித்து ஆராயப்பட்டவிடையங்களைமக்களுக்கும் விவசாயிகளுக்கும் தெரியப்படுத்துவதற்குஎவ்விதநடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லைஎனவிவசாயிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

# வெங்காயத்தின் விலையில் வருகிறது அதிரடி மாற்றம்



அடுத்த வாரம் நாட்டில் வெங்காயத்தின் விலை குறைவடையும் என வர்த்தகம் மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஏ.எம்.பி.எம். அத்தபத்து தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் –

பண்டிகைக் காலத்தில் வெங்காயத்தின் தேவை அதிகரித்துள்ள நிலையில் மூன்று மாதங்களுக்கு பெரிய வெங்காயத்தை வழங்குமாறு இந்திய உயர்ஸ்தானிகரிடம் எழுத்து மூலம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் அடுத்த வாரத்திற்குள் நாட்டுக்குத் தேவையான அளவு வெங்காயம் கிடைத்துவிடும் என்பதால் வெங்காயத்தின் விலை குறைவடையும் எனத் தெரிவித்துள்ளார். (05)

# இலங்கைக் கிரிக்கெட் சபையில் ஆலோசகராக சனத் ஜயசூரிய



இலங்கை கிரிக்கெட் அணியின் ஆலோசகராக முன்னாள் சகலதுறை ஆட்டக்காரர் சனத் ஜயசூரிய நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கமைய இலங்கை கிரிக்கெட் சபையின் உயர் தொழில்நுட்ப மத்திய நிலையத்தின் கீழ் உள்ள அனைத்து அணிகளையும் சனத் ஜயசூரிய மேற்பார்வை செய்வார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சனத் ஜயசூரிய இதற்கு முன்னர் இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் தொழில்நுட்பக் குழுவின் தலைவராகவும் தேசிய தெரிவுக்குழுவின் தலைவராகவும் பணியாற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (05)

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 16.12.2023இல் வெளியிடப்பெற்றது.